1289

REGISTERED No. M. 6165. ஆ. 2

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 DEC 1956
MADRAS

பத்ஹுல் இஸ்லாம்

FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

1289
4-56

டிசம்பர் 1956.

விஷயம்.	பக்கம்.
அல்லாஹ்வுடைய ரஹ்மத்து வேண்டும் 'ஜஹ்மத்து' வேண்டாம்	1
நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் குர்ஆனின் நல்லுபதேசமும்	7
ஷாபிஈ மத்ஹபின் சிறப்புக்கள் (T. F. R. மஆலி ஸாஹிபு-பாகவி)	13
திருக்குர்ஆன் சாரசங்கிரஹம் (ரஹ்மத் பாகவி)	19
ஏமாற்றம்! (மாஸ்டர் ஹாரிஸ் பாபு)	23
...வை சிப்கத்துல்லா அல்லது ...கிய தூயவர்	29

...இஸ்லாம் ஆபீஸ் :
...ஹரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

3L
Q7ɱ211,N24FI
N56.
187058

பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

வருஷ சந்தா	ரூ.	1-8-0
தனிப் பிரதி	அணா.	0-2-0
மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா	ரூ.	2-0-0

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதரூஸ் 5.

இஸ்வத்து நாச்சியுடைய கிஸ்ஸா.

இது ஷாம் தேசத்தி லிருந்த லாபி றென்னும் ஆலி முடைய மகள் இஸ்வத்து நாச்சியாரின் சரிதையாகும். இதில் இஸ்வத்து நாச்சியாருக்கும் ஹபீபென்னும் ஒரு பணக்கார வியாபாரிக்கும் நடந்த நிக்காஹும், ஹபீபென்பவர் வெளியூர் சென்றிருக்கும்போது அவருடைய தம்பி இஸ்வத்து நாச்சியாரை கெடுக்க முயற்சித்ததும், இஸ்வத்து நாச்சியார் தன் கற்பை காப்பாற்றுவதில் பட்ட கஷ்டங்களும், பின் தான் ஆண் உருவ மேற்றுக்கொண்டு செய்த நற்செயல்களும், கடைசியில் தனது கணவரைச் சேர்ந்ததும் மிகவும் விரிவாக விபரிக்கப்பட்டுள்ளன. இதை ஒவ்வொரு முஸ்லிமும், பெண்கள் குறிப்பாகவும் படித்தறியவேண்டியது அவசியம்.

இதன் விலை அணா. 10

கிடைக்குமிடம் :—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதரூஸ் 5.

الاسلام

பத்ஹுல் இஸ்லாம்

டிசம்பர்—1956.

அல்லாஹ்வுடைய ரஹ்மத்துவேண்டும் ‘ஜஹ்மத்து’ வேண்டாம்.

“மழைக்காலம். பூமியில் அல்லாஹ்வுடைய ரஹ்மத்து என்னும் பேரருள் இறங்கும் காலம்” என்று பெரியோர்கள் கூறுவார்கள். ஆம், மழைக்காலம் வந்தால் மாந்தர்களுக்கு மட்டுமல்ல, ஜீவஜந்துக்களுக்கு மட்டுமல்ல; பொதுப்படையாக மரஞ் செடி கொடி ஈருக எல்லா சிருஷ்டிப் பொருள்களுக்குமே உணர்ச்சியும் கவர்ச்சியும் எழுச்சியும் வளர்ச்சியும் தரும் காலமாகும்.

ஆஹா! வானத்திலே கார்மேகங்கள் சூழ்ந்து, ஜில்லென்ற குளிர்ந்த காற்று வீசி, முதலில் சிறு சிறு தூறலாக மழைத்துளி பொழிந்து, பிறகு சோணாமாரியாக, வானத்திலிருந்து மழை நீர் வர்ஷிக்கும்போது மனதுக்கு எவ்வளவோ சந்தோஷம் உண்டாகிறது! மழை வருகின்ற அறிகுறி கண்டதும் மயில் இனங்கள் அழகிய தோகை விரித்து ஆடுகின்றன. பட்சி ஜாலங்கள் இனிய குரலால் கத்திப் பாடி பரவசமடைந்து, பறந்து ஓடுகின்றன. ஆடு மாடுகள் தங்களுக்கு இனி மேய்வதற்குப் புற்பூண்டு கிடைக்குமென்று துள்ளி ஓடுகின்றன. நீர் வறண்ட குளங்குட்டைகளில் வதியும் தவளைகளும் ஆனந்தக்களிப்பில் கத்திக் கூச்சலிடுகின்றன.

அதுமட்டுமல்ல; பல மாதங்களாக நீர்ப்பாய்ச்சலின்றி வறண்டு வாடிக்கிடந்த நிலம் புலன் பயிர்களுக்கு நல்லகாலம்—மாரிகாலம்—மழை காலம் வந்துவிட்டதென்று, ஏழை விவசாயிகளாகிய குடியானவர்கள் மிகவும் ஆனந்தங் கொண்டு, சந்தோஷத்தால் முகம் மலர்ந்து, 'அல் ஹம்துலில்லாஹ்' (எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்கே) என்று இறை வனுக்கு நன்றி செலுத்துகிறார்கள்.

அல்லாஹ்வுடைய 'ரஹ்மத்து' என்னும் மழையானது மிதமாகப் பொழிந்ததனால், பயிர்பச்சைகள் செழித்து, மரஞ் செடி கொடிகள் பூத்துக் காய்த்து கனிந்து மனிதர்களுக்கும் சகல ஜீவஜந்துக்களுக்கும் அளவற்ற நன்மைகளை உண்டாக்குகின்றன. விளைந்த தானியங்களை மனிதன் ஆகாரமாகக்கொண்டு உண்டு ஜீவிக்கின்றான். புற்பூண்டு தழைகளை ஆடுமாடு ஜீவஜந்துக்கள் உண்டு உயிர்வாழ்கின்றன.

மழை என்னும் ரஹ்மத்து, உலகில் மக்களின் உஜ்ஜீவியத்துக் காகவே, இறைவனால் பொழியவைக்கப் படுகின்றன. மறுமலர்ச்சியும் புதுமலர்ச்சியும் உலக மன்பதைகளிடையே, ரஹ்மத்தின் காரணத் தாலேயே உண்டாகின்றன என்பதை, தெள்ளென அறிந்தோம்.

சோதரீர்! சில காலத்தில், சில சமயங்களில், சில பிரதேசங்களில், அருள் என்னும் "ரஹ்மத்தே" வேதனை என்னும் "ஜஹ்மத்" தாக முடிந்து விடுவதும் உண்டு. (அரபு மொழியில் 'ரஹ்மத்' என்ற மொழிக்கும் 'ஜஹ்மத்' என்ற மொழிக்கும் ஒரே ஒரு 'நுக்தா' என் னும் புள்ளிதான் வித்தியாசம். ரஹ்மத்துக்கு 'ரே' மீது புள்ளி கிடையாது; ஜஹ்மத்துக்கு 'ஜே' மீது புள்ளி இருக்கும்.)

"ரஹ்மத்து அளவுக் கதிகமாகி விட்டால் ஜஹ்மத்தாக முடிந்து விடுகிறது" என்று பெரியோர்கள் கூறுவார்கள். இது முற்றும் உண்மையாகும். அதாவது, மழைபெய்யவேண்டியதுதான்; கிணறு, குளம், குட்டை, ஏரி, எல்லாம் நீரால் நிறைந்து, நானிலத்துக்கும் மாந்தர்கட்கும் நன்மை பயக்கவேண்டியது அத்தியாவசியம்தான். ஆனால், அளவுக்கதிகமாய் அடைமழை பொழிந்து, வெள்ளம் புரண்டோடி, குடிசைகளிலும் ஊர்களிலும் புகுந்து படுநாசம் விளை விப்பதும் உண்டு. ஆற்றில் வெள்ளம் வந்து கரையை உடைத்துக் கொண்டு, ஊர்களை யெல்லாம் அழித்துவிட்டதென்று நாம் பத்திரிகை களில் செய்தி படிக்கின்றோம். ஜனங்கள் வாய் மூலமாகவும் செய்தி அறிகின்றோம்.

187058

சில நாட்களுக்கு முன், நம் பாரத தேசமாகிய இந்த ஹிந்துஸ்தானத்தின் அழகிய தலைநகரமாகிய டில்லி (தெஹ்லி) மாநகரத்தில், அருகே ஓடும் 'ஜமுனா' நதியில் வெள்ளப் பிரவாகம் பெருக்கெடுத்து வழிந்தோடி, நகரத்தருகே சில பகுதிகளில் நாசத்தை உண்டு பண்ணி விட்டதென்று கேள்விப்பட்டோம். அதுமட்டுமல்ல; காவேரி, பாலாறு, துங்கபத்ரா முதலிய நம் தென்னாட்டு நதிகளிலும் வெள்ளப் பெருக்கெடுத்து வழிந்து, பல ஊர்களுக்கும் பல உயிர்களுக்கும் பலப்பல நஷ்டத்தை உண்டாக்கி விட்டதென்று அறிந்து கொண்டோம்.

குடிசைகள் வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போனதற்கும், ஆடு, மாடு, மாந்தர் உள்பட பல உயிர்களுக்கு நஷ்டம் உண்டானதற்கும், நஞ்சை நெற் பயிர்க ளெல்லாம் சரிந்து, சீர் குலைந்து மண் மேடாய்ப் போனதற்கும் காரணம் என்ன? உலகத்துக்கும் உயிர்களுக்கும் உஜ்ஜீவியம் அளிக்க வல்ல மஹானுகூலப் பொருளா யிருக்கும் மழையேதான் அல்லவா? ஆம், மழையேதான், அதற்கும் இதற்கும் காரணம்!

மழை என்னும் றஹ்மத்து அளவோடு பெய்தால், உலகத்திற்கும் உயிரினங்களுக்கும் நன்மையாகிறது. அதே மழை அளவுக்கதிமாய் பெய்துவிட்டால், அதுவே உலகத்துக்கும் அதில் வாழ் உயிரினங்களுக்கும் மாந்தர்கோடிக்கும் மகாத் தொல்லையாகவும் துன்பமாகவும் போய்விடுகிறது. ஆகவே இப்படிப்பட்ட அபரிமிதமான அடை மழையைக் கருதியே பெரியோர் "றஹ்மத்து வேண்டும்; ஜஹ்மத்து வேண்டாம்" என்று கூறுகின்றனர். ஆம், வாஸ்தவமே!

அளவுக்கதிகமான மழையும் வெள்ளமும் பிரளயமும், ஆண்டவனுடைய வேதனை என்னும் தண்டனைகளில் ஒருவகை யாகும். தீ விபத்து ஒரு வகையான தெய்வ தண்டனை; பூமி யதிர்ச்சி ஒரு வகையான தெய்வ தண்டனை; வீடிடிந்து வீழ்வதும், ஏரிக்கரை உடைத்து ஊரில் வெள்ளம் வருவதும், ஆற்றுப் படுகை உடைத்துப் பிரவாகம் பெருக்கெடுத்து ஓடுவதும் ஒருவகையான 'அதாபு' என்னும் தண்டனையே யாகும்.

அல்லாஹுத ஆலா, இத்தகைய 'அதாபு' என்னும் தண்டனையை, உலகில் எத்தனையோ முறை உண்டாக்கி யிருக்கின்றான். எதற்காக ஆண்டவன் இத்தகைய அதாபை—வேதனையை—தண்டனையை

உண்டாக்குகிறான் என்று, மாந்தரில் வெகு பேர் உய்த்துணர்ந்து புத்தி மதியும் நற்படிப்பினையும் பெறுவதில்லை. "ஏதோ, எங்கோ மழை அதிகம் பெய்ததால் வெள்ளம் வந்து விட்டது" என்று சொல்லி வருந்தி, சும்மா இருந்து விடுகின்றனர்.

ஓர் ஊரில், ஒரு நாட்டில், ஆண்டவன் அதிகமான மழையை பெய்யச் செய்து வெள்ளப் பெருக்காக்கி அழிவை உண்டாக்குவானானால், அதற்கு இயல்பான காரணம் இருக்கத் தான் செய்யும். இறைவனுடைய மகாத்மியத்தில்—அல்லாஹ்வுடைய குத்ரத்தில் நம்பிக்கை இல்லாத பேர்வழிகள் மழை, வெள்ளம், புயல் இவைகளுக்கான காரணத்தை 'இயற்கை'யின் மீது போட்டு விட்டு, சும்மா இருந்து விடலாம். ஆனால் உலகில் எல்லா தேசங்களிலும், எல்லா நாடுகளிலும், எல்லா ஊர்களிலும் ஏக காலத்தில் சமமாக மழை பெய்யாமல், ஒரு சில குறிப்பிட்ட ஊரில் மட்டும், நாட்டில் மட்டும், தேசத்தில் மட்டும் சோணாமாரி பொழிந்து, வெள்ளக் காடாய் அழிந்தொழிந்து போவதற்கு தெய்வ நியதியான காரணம் உண்டு.

"வதிக்கல் குரா அஹ்லக்னாஹும், லம்மா லலமூ வஜஅல்னா லி மஹ்லிகிஹிம் மவ்இதா" என்ற குர்ஆன் ஆயத்தை ஓர்ந்து பாருங்கள். "அந்த ஊரை நாம் அழித்துப் போட்டோம்; அவர்கள் மகா அக்கிரமம் புரிந்தார்கள்; அழிந்து போகும் ஸ்தலத்தை அவர்கட்கு ஒதுங்குத் தல மாக்கிவிட்டோம்" என்று அவ்வாயத்தில், மனித சமூகத்துக்கு ஆண்டவன் எச்சரிக்கை விடுக்கின்றான். அதாவது குறிப்பிட்ட அந்த ஊர்க்காரர் அக்கிரமமான காரியங்களில்–பாவத்தில் ஆழ்ந்து போனார்கள். சத்தியம் அழிந்து அதிக்கிரமம் தலை ஓங்கிய பின், அந்த ஊர்காரர்கள் பூமியின் மீது உயிர் வாழ்வதற்கு தகுதியற்றவர்களாய் விடுகிறார்கள். எனவே அல்லாஹு தஆலா அவர்களை அழித்து விடுகிறான். அதாவது அழிப்பதற்காக பல முஸீபத்துகளை உண்டாக்குகிறான்; தொத்து வியாதிகளை பரவச் செய்கின்றான்; பூகம்ப அதிர்ச்சிகளை உண்டாக்கி பூமியை பிளந்து விடுகின்றான்; கோரமான தீ விபத்துக்களை உண்டாக்கி கரித்து, அழித்து விடுகின்றான். இன்றேல் வானத்திலிருந்து சோணாமாரியாய் அமித மழையைப் பெய்ய வைத்து, பூமியை வெள்ளக் காடாக்கி, ஏரிக்கரையை உடைத்து, ஆற்றுப் பெருக்கை குறுக்கே பாய வைத்து, குறிப்பாக அந்த ஊரை நாசப்படுத்தி, தண்டனை யளிக்கின்றான். ஆனால், மாந்தர் இதை மறந்து விடுகின்றார்கள்.

வெள்ளப் பெருக்கால், அதிக மழையால், காடும் காட்டு மக்களும் அழிந்து ஒழிந்து போகும் சம்பவம் உலகிற்குப் புதிது அல்ல. ஆதி காலந் தொட்டே, ஆண்டவன் இத்தகைய தண்டனைகளை மனித சமூகத்திற்கு அளித்தே வந்துள்ளான். உதாரணமாக, நபி நூஹு அலைஹிஸ்ஸலாம் காலத்து வெள்ளப் பெருக்கை, உலகில் தோன்றிய முதல் பிரளயம் (தூபானே நூஹ்) என்று பண்டை வேதாகம சரித்திரமும், நமது திருக் குர்ஆன் வேதமும் வர்ணிக்கின்றன.

நூஹ் நபி அலைஹிஸ்ஸலாம் காலத்து ஜனங்கள் அதாவது அந்த நபியின் உம்மத்து ஜனங்கள், இறைவனின் கட்டளைக்கு மாறு பாடு செய்தார்கள்; பாபக் காரியங்களில் ஆழ்ந்து கிடந்தார்கள். நூஹு நபியுடைய உபதேசங்களை நிராகரித்து, மனம் போன்ற போக்கில் கெட்டலைந்தார்கள். இந்தப் பாபச் செயல் புரிந்த பாபிகளில் நூஹு நபியுடைய மகன்கூட ஈடுபட்டுக் கெட்டலைந்தான். முதலில் ஆண்டவன் கட்டளைப்படி, தன் மகனையும் ஊர் ஜனங்களையும் நூஹு நபி எச்சரிக்கை செய்தார்கள்:—"ஆண்டவனுடைய கோபத்தாலான தண்டனை வரப்போகிறது. தவ்பா செய்து ஈமான் கொண்டு நல்லவர்களாகி, என்னோடு வந்து சேர்ந்து கொள்ளுங்கள்" என்று கூறினார்கள். அதற்கும் அவர்கள் இணங்கி வரவில்லை. எனவே, ஆண்டவன் கட்டளைப்படி, மகாப் பெரும் படகு செய்து, அதில் ஈமானுள்ள உத்தமர்களையும், பேதைப் பிராணிகளான மிருகங்கள் பட்சிகள் ஜந்துக்கள் முதலிய உயிரனங்களையும் ஏற்றிக் கொண்டு போனார்கள். பிறகு அல்லாஹ்வுடைய 'ஜஹ்மத்து' (றஹ்மத்தல்ல) என்னும் கொடிய மழை, பல நாள் தொடர்ந்து பெய்து, எங்கும் வெள்ளக்காடாய், மகாப் பிரளயமாய் போய்விட்டது. கட்டிடங்கள், மரங்கள் எல்லாம் மூழ்கி, மலை உச்சு வரைக்கும் வெள்ளப்பிரவாகம் பெருகி விட்டது. சமுத்திரம் பொங்கி வழிந்தது. சூறாவளியும் கடுமையாய் வீசியது. இப்பொல்லாதப் பிரளயத்தில், அந்த காலத்துப் பாவிகளெல்லாம் ஒழிந்தனர்; உலகமெல்லாம் சீர்அழிந்தது. வெள்ளம் வடிந்து, பூமியெல்லாம் உலர்ந்து, மனிதர் வாழுவதற்குத் தகுதியாவதற்குப் பல நாட்களாய் விட்டன. அதன் பிறகே, புது உலகம் உற்பத்தியானது. நூஹு நபியுடன் கப்பலில் இருந்த சில பல பேர்களினாலும், சொற்ப ஜீவஜந்து பிராணிகளினாலும், பெருகிப் பல்கி வியாபித்து விருத்தியானதுதான் இந்தப் பிரபஞ்சம்.

பிறகு தமூது கூட்டத்தாரும் வெள்ளத்தினுல் அழிந்து போனுர்கள். அதன் பின், ஆது கூட்டத்தாரும் வெள்ளப் பெருக்கினுல் சீர் குலேந் தொழிந்தார்கள். நபி மூஸா அலேஹிஸ்ஸலாமுடன் போராட்டம் புரிந்த பிர்அவ்னும் அவன் கூட்டத்தாரும், கடல் நடுவே எழுந்த வெள்ளப் பெருக்கினுல்தான் அழிந்து ஒழிந்துப் போனுர்கள். இவ்வாறே ஆண்டவனுடைய கோபத்துக்கும் தெய்வ தண்டனைக்கும் இலக்காகித்தான் லூத் நபியுடைய கூட்டத்தாரும் பூமிக்குள் ஆழ்த்தப்பட்டு மடிந்து போனுர்கள்.

சோதரீர்! இப்போது இஸ்லாமிய நாடாகிய எகிப்து மீது, யூதர்களும் கிறிஸ்துவர்களும் (இஸ்ராயிலியர், பிரிட்டிஷார், பிரெஞ்சுக்காரர்) அநியாயமாய் படையெடுத்து நாட்டை அழித்து, ஆக்கிரமத்துக் கொள்ள முற்பட்டு குழப்பங்களே உண்டாக்கி வருகின்றனரே, அந்தமத்திய தரைக்கடல் பிரதேசம் எப்படிப்பட்டது தெரியுமா? இந்த தேசங்களெல்லாம் ஒருகாலத்தில் ஆண்டவனுடைய கோபத்தாலான பலா முஸீபத்து, அதாபு, தண்டனேகளால் அழிந்துப் போய் மீண்டும், தலேதூக்கி நிலேபெற்றவைகளேயாகும்.

அதே பிரதேசத்தில், அல்லாஹ்வுடைய பெயரைச் சொல்லும் இஸ்லாமிய தேசத்தின் மீது, மீண்டும் காபிர்களும் யஹூதி நஸாராக்களும் அதிக்கிரம் செய்துவருகிறுர்கள். எனவே, அந்தப் பிரதேசத்தார் மீது (விரோதிகள் மீது) இன்னும் என்னென்ன (தீ, நீர், பூகம்ப,) பலா முஸீபத்துகள் வரப்போகின்றனவோ அதை, எல்லாம் வல்ல அல்லாஹு தஆலாவே நன்கறிவான்.

ஆண்டவனே, எங்களுக்கு ரஹ்மத்து அருள் மட்டும் வேண்டும்; ஜஹ்மத்து-தண்டனே வேண்டாம்! ஆமீன்!

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் குர்ஆனின் நல்லுபதேசமும்.

(இரண்டாவது பாகம்)

அத்தியாயம் 2.

அவனியில் அறிவின் அவசியத்தை அரேபியர் அறிந்துணர்ந்து அமல் செய்ததைப் போல வேறெந்த சமுதாயமும் இருந்ததில்லை என்பது வெள்ளிடைமலை. முஸ்லிம் கவிஞரொருவர் சொல்கிறார்: "கற்றறிந்த கனவானொருவனைக் கண்டதும் அவரது கரங்களைப் பற்றி முத்தமிட வேண்டுமென்ற அவா எனக்கு ஏற்படுகிறது." புவியோர் புகழத் தகுந்த இத்தகைய உன்னத உணர்ச்சிக்கு உற்சாகமும் உத்வேகமுமளித்தது அருமறையின் அருமைச் செய்தியும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நல்லுபதேசமுமே யாகும். "கற்றோரின்மையும் தியாகியின் குருதியும் சம அந்தஸ்துள்ளவை," "பேனைக்களையும் மையையும் விட்டுச் செல்பவனுக்கு சுவனலோகம் திறந்து வைக்கப் பட்டிருக்கிறது" அதாவது உபதேசம் உதாரணம் மூலம் கல்வியின் மேன்மையை எடுத்துரைப்பவனுக்கு நற்பதவி உண்டு என்பது எம் பெருமானார் (ஸல்) அவர்களின் எழில் மிகு வாக்கு. நபிகள் நாயகம் (ஸல்) நவின்றுள்ளார்கள்: "நானிலத்துக்கு நான்கு காரியங்கள் மட்டுமே ஆதரவாக அமைந்துள்ளன. அவையாவன: விவேகிகளின் அறிவு, தலைவர்களின் நியாயம், நல்லோரின் வணக்கங்கள், தைரிய சாலிகளின் தீரம்" செல்வமும் சொத்தும் அற்பத்தனமானவை, அழியுந் தன்மை யுடையவை யெனவும் கல்வியறிவு கண்ணியம் தரும் காவல னெனவும் இறைவன் இயம்பி யிருப்பதாக முஸ்லிம்களிடையே நம்பிக்கை நிலவி வருவது இங்கு நினைவு கூரத்தக்கது. பணத்தை விட படிப்பு மேன்மையான தென்பதை எம்பெருமானார் (ஸல்) எடுத்துரைத்திருக்கிறார்கள். அண்ணல் நபி (ஸல்) யின் அருமை மருமகனார் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அறிவின் அருமை பெருமையை அறிவுறுத்தி யிருக்கிறார்கள்.

தத்துவ ஞானத்துக்கும் விஞ்ஞானத்துக்கும் புத்துயிரளித்து புதுமெருகிட்டவர்கள் முஸ்லிம்களாவர்.

அப்பாஸியா, உமையா கலீபாக்களின் ஆதரவில் ஆசியா கண்டத்து அரபுகளும் ஸ்பெயின் தேசத்து மூர்களும் அறிவு மறுமலர்ச்சித் தூதுவர்களாகத் திகழ்ந்தார்கள். எனவே, புராதன நவநாகரீக இலக்கியங்களுக்கிடையே இனியதொரு இணைப்பாக இருந்தார்களென முஸ்லிம்கள் போற்றப்படுகிறார்கள். ஆரம்பத்தில் கீழ்த்திசை நாடுகளிலிருந்துதான் ஐரோப்பாவுக்கு அறிவு மறுமலர்ச்சி பரவியது. இரண்

டாவது தடவையாக, கிழ்த்திசை நாடுகளிலிருந்து ஐரோப்பாவுக்கு அறிவுச் செல்வம் கொண்டு சென்றவர்கள் முஸ்லிம்களே. அறுநூறு வருடகாலம்வரை அரபியர்களிடையே கலைகளும் கலாசாரமும் விஞ்ஞான சாஸ்திரமும் தழைத்தோங்கின என்பதும் அதே சமயத்தில் ஐரோப்பாவில் அறியாமையும் அந்தகாரமும் தலைவிரித்துத் தாண்டவமாடின என்பதும் உலகறிந்த உண்மை.

அறிஞர் முஹ்ஸிம் சொல்கிறார்: "நம்பத் தகுந்த சாக்ஷிகளில் பெரும்பாலானோரின் ஏகமனதான கூற்றுப்படி, பத்தாவது நூற்றாண்டில் மேல்திசை நாடுகளிலே நிலவிய அந்தகாரத்தைவிட மிகவும் துயரத்துக்குரியதும் பரிதாபத்துக்குரியதும் வேறு எதுவும் இருக்க முடியாது; கல்வியறிவு, தத்துவஞானத் துறைகளைப் பொறுத்தவரை இக்காலத்தை லத்தீன் பேசுவோரின் இரும்புக் காலம் என்று இயம்பலாம்......லத்தீன் பேசுவோரின் தத்துவ ஞானம், தர்க்க சாஸ்திரம் என்ற ஒரே துறை வரைதான் வியாபித்திருந்தது: மானிட விவேகத்தின் கடைசிக்கட்டம், கரை என இதனை அவர்கள் பாவித்தார்கள். ஸ்பெயினிலும் இத்தாலியிலும் அரேபிய தத்துவ ஞானிகள் பல பாடசாலைகளை ஏற்படுத்தி யிருந்தார்கள் என்பது நிச்சயம்; அறிவு தேடி அநேகர் இக்கல்வி நிலையங்களுக்கு வந்திருந்து அரேபிய தத்துவ ஞானக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் ஏற்றுக் கொண்டு கிறிஸ்தவ பாடசாலைகளில் புகுத்தினார்கள்." அவர் மேலும் கூறுகிறார்: ஐரோப்பாவில் பத்தாவது நூற்றாண்டிலிருந்து தழைத்தோங்கிய பௌதீகம், வானசாஸ்திரம், தத்துவ ஞானம், அல்லது கணித சாஸ்திரம் முதலிய அறிவு அனைத்தும் அரேபிய அறிஞர்களிடமிருந்துதான் தழைத்தோங்கியது என்பதையும் குறிப்பாக ஐரோப்பிய தத்துவ ஞானத்தின் தந்தைகளென ஸ்பானிய அரபுகளை பாவிக்கலாம் என்பதையும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்" கவிதைக்குரிய கற்பனை சக்தி, காதல் கதைகள் ஆகியவைமுதல் முதலாக வெளிப்பட்டதற்கும் அரபுகளுக்கு ஐரோப்பியர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

மகான் மஹ்மூது நபி (ஸல்) அவர்களின் மருமகனும் 'குலபாவுர் ராஷிதீன்' (நேர்வழிபெற்ற கலீபாக்கள்) வரிசையில் நாலாவது கலீபாவுமான ஹஸ்ரத் அலீ இப்னு அபீதாலிப் (ரலி) அவர்கள் இலக்கிய வளர்ச்சியில் அக்கரை காட்டி ஆதரவு காட்டினார்கள். கலீபா பதவியை பிதுரார்ஜித சொத்தாக்கிய ஹஸ்ரத் முஆவியா(ரலி) வின் ஆட்சியில் கிரேக்கர்களுடைய விஞ்ஞான செல்வத்தைச் சேகரித்தார்கள். அப்பாஸியா வம்சத்தின் இரண்டாவது கலீபாவான அபூஜாபர் அல் மன்சூரும் இலக்கிய வளர்ச்சியிலும் விஞ்ஞான முன்னேற்றத்திலும் சிரத்தைக் காட்டினார். அவரது பேரரும் வீரதீரத்துக்காக கிரேக்கர்களால் அஞ்சப்பெற்ற வருமான ஹாரூன் அல்ரஷீத் ஐரோப்பாவுக்கு நன்கு அறிமுகமானவர். விஞ்ஞான விருத்தியில் விசேஷ கவனமும் அறிவு அபிவிருத்தியில் அக்கரையும் காட்டிய

அந்த கலீபா, சார்ல் மாக்னியுடன் கடிதத் தொடர்பு கொண்டிருந்தார். எனினும், அரேபியர்களின் இலக்கியப் புகழுக்கு அஸ்திவாரமிட்டவர் அல்மாமூன் ஆவார். அவரது அரசவைக்கு நூற்றுக் கணக்கான ஒட்டகங்களில் ஓலைச்சுவடிகள் வந்திறங்கின. ஸெவிலிலிருந்து இஸ்பஹான் வரை முஸ்லிம்களுடைய இலக்கிய பொக்கிஷங்கள் துரிதமாகப் பரவின. பக்தாத், பஸ்ரா, கூபா, கார்தொவா. கெய்ரோ, கிரானடா, வாலன் ஷியா, ஸெவில் ஆகிய நகரங்களில் அறிவு மறுமலர்ச்சி தூது வர்களாக முஸ்லிம்கள் திகழ்ந்தார்கள். மேல் நாடுகளிலே தத்துவ ஞானம் துரிதமாகப் பரவியது; குறிப்பாக, அரேபியர் போற்றிப் புகழ்ந்த அரிஸ்தாத்திலின் தத்துவ சாஸ்திரம் வெகு வேகமாக பரவியது. ஒன்பதாவது நூற்றாண்டு முதல் பதினான்காவது நூற் றாண்டு வரை அரேபிய பாடசாலைகளிலிருந்து வெளிக்கிளம்பிய அறி வுச்சுடர் அவனிமுழுவதும் வியாபித்துக் கொண்டது.

அறிவுத்துறைக்கு ஆக்கந் தந்த முஸ்லிம் முடி மன்னர்களில் முக்கியமாகக் குறிப்பிடவேண்டியவர்கள் ஸ்பெயின் தேசத்து அப்துல் ரஹ்மான் வம்சத்தவராவர். கி. பி. 749ம் வருடத்தில் ஸ்பெயினில் உமையா பரம்பரையினரின் ஆட்சிக்கு அஸ்திவார மிட்ட அப்துல் ரஹ்மானின் பிற்சந்ததியினரான இவர்களில் மூவர் இருந்திருக்கின்ற னர் என்பது தெரிகிறது. இம்மூவரில் மிகச்சிறந்தவர் மூன்றாமவர்; அவர்தான் அந்த வம்சத்தின் கடைசி அரசருமாவார். எட்டாவது கலீபாவான அவர் முதல்தடவையாக "அமீருல் மூமினீன்" (நன்னம் பிக்கையாளர்களின் தலைவர்) என்ற பட்டத்தைச் சூடிக்கொண்டார். பத்தாவது நூற்றாண்டிலே நிகழ்ந்த அவரது ஆட்சி அரை நூற்றாண் டுக் காலம் நீடித்தது. ஐரோப்பா அந்தகாரத்தில் அமிழ்ந்திருந்த போது ஸ்பெயினில் இலக்கிய முன்னேற்றம் ஏற்பட்டு, ஐரோப்பா வுக்கும் அறிவு பரவியது. பக்தாத், பஸ்ரா, புகாரா பாடசாலைகள் பிரசித்திப் பெற்றிருந்தாலும் ஐரோப்பிய பிரயாணிகளையும் மாணவர் களையும் கவரு மளவுக்குச் சமீபத்திலில்லை. நீதி நெறி தவறா இம்மன் னரின் ஆட்சியிலே கல்வி நிலையங்களை ஐரோப்பியர்களுக்கு ஸ்பெயின் திறந்து விட்டிராவிடில் அரேபியர்களிட மிருந்து அறிவுப்பொக்கி ஷத்தை ஐரோப்பியர்கள் பூரணமாகப் பெற்றிருக்க முடியாது என்பது திண்ணம். கலைகளின் காவலனாக அப்துர் ரஹ்மான் திகழ்ந்தார். அவரது அரசவை அதியற்புதமானதாக விருந்தது; மாளிகைகளில் சிற்பக்கலை சிறந்து விளங்கியது; பூவுலகின் பூந்தோட்டங்களாக பூங் காக்கள் மிளிர்ந்தன.

முஸ்லிம்களுக்கு ஐரோப்பியர்கள் பெரிதும் கடமைப்பட்டிருக் கிறார்கள். நிலப்பிரபுத்துவ முறையை நிர்மூலமாக்கி அடக்குமுறை ஆட்சியை அழித்தொழித்த இஸ்லாத்துக்கு இவ்வையத்தோர் கடமைப்பட்டிருக்கிறார்கள். உரிமைகளுக்கு உத்தரவாதமளித்து, ஜனநாயகத்துக்கு அஸ்திவாரமிட்ட முஸ்லிம்களைப் போற்றுவது

ஐரோப்பியர்களின் கடமையாகும். மேல்திசை நாடுகளிலே அருள் நீங்கி இருள் நிலவியபோதும் அறிவு இல்லாமல் அந்தகாரமும் அறியாமையும் இருந்தபோதும் கிரேக்க தத்துவ ஞானிகளின் பெரும் கிரந்தங்களைப் போற்றிப் பாதுகாத்து பரிபூரணத் தன்மை அடையச் செய்தவர்களும் விஞ்ஞானம், வைத்தியம், கணித சாஸ்திரம் ஆகிய முக்கிய துறைகளில் புதிய கண்டுப்பிடிப்புகளுக்குப் பொறுப்பாக விருந்தவர்களும் முஸ்லிம்கள் அன்றோ? அந்த அறியாமைக் காலத்திலே ஸ்பெயின் போன்ற இஸ்லாமிய தேசங்கள் அறிவுப்பொக்கிஷத்தை அனைவருக்கும் திறந்து விட்டிருந்தன அல்லவா? காட்டுமிராண்டித் தன்மையிலிருந்து கனவான் அந்தஸ்துக்கு ஐரோப்பியர்கள் உயர்வதற்கு முஸ்லிம்கள் துணையாகவும் தூண்டுகோலாகவும் இருந்தார்கள் அல்லவா? அவரோஸ், அவிஸென்னு என்று ஐரோப்பியர்களால் அழைக்கப்படும் முஸ்லிம் அறிஞர்கள் அல்லவா அவர்களுக்கு அறிவுச் சுடர் அளித்த அன்பர்கள்? பூகோள சாஸ்திரத்தில் அவர்களுக்கிருந்த அக்கரையும் அறிவும் அவர்களை ஆப்ரிக்க பாலைவனப் பகுதிகளிலும் சாம்ராஜ்யங்களை அமைக்கச் செய்தன. இஸ்லாத்தின் பொற்காலத்தி லிருந்து, இல்லை அதன் ஆரம்பத்திலிருந்தே இலக்கிய வளர்ச்சிக்கு இறைமறை சாதகமாக இருந்து வந்திருக்கிறது. "கல்வி முதிர்ச்சியில்லா மனம், ஆன்மா இல்லா உடலுக்குச் சமமானது; பணத்திலன்றி, படிப்பில்தான் கீர்த்தி அடங்கிக் கிடக்கிறது" என்று நபிகள் நாயகம் (ஸல்) நவின்றிருக்கிறார்கள். கடல் கடந்து சென்றும் கல்வியைக் கற்றுக்கொள் என்பது வள்ளல் நபி (ஸல்) யின் வாக்கு.

பல தலைமுறைகள்வரை கலீபா பதவி வகித்துவந்த வேந்தர்கள் தரணியில் தலைசிறந்து, தன்னிகரற்று விளங்கினர்கள். மதமாச்சரியங்கள் மறக்கப்பட்டன; மற்ற மதத்தினருக்கும் மதிப்பு அளிக்கப்பட்டது. திமஷ்க் கல்வி நிலையத்துக்கு கிறிஸ்தவரொருவரைத் தேர்ந்தெடுத்ததாகப் புகார் சொல்லப்பட்டபோது கண்ணிய மிகு கலீபா அல்மாமூன் சொன்னர்: விஞ்ஞானத்துறையில் எனக்குப் போதகாசிரியராக இருப்பதற்காகவே யன்றி மத விவகாரங்களில் எனது வழிகாட்டியாக இருப்பதற்காக இம்மனிதரை நான் தேர்ந்தெடுக்கவில்லை.

ஸ்பெயினில் முஸ்லிம் முடிவேந்தர்களின் ஆட்சிக்கு முற்றுப் புள்ளிவைக்கப்பட்டது குறித்து அழுது புலம்பாதவர் எவருளர்? கொடுமை அல்லது கொடுங்கோன்மைக்குக் கொஞ்சம் கூட இடமளியாமல் நேர்மையாகவும் சீர்மையாகவும் ஆட்சி செலுத்தியவர்களென இஸ்லாத்தின் எதிரிகளால் கூட ஏற்றிப் புகழப்படும் முஸ்லிம்களின் எண்ணூறு வருட கால ஆட்சியை புகழாதிருப்பவர் எவருளர்? மனிதன்மையோடு மாண்புறும் வகையில் நடந்து கொண்ட மக்களை மரியாதைக் குறைவாக, மகா கேவலமாக நடத்த வேண்டுமென அரசாங்கங்களைத் தூண்டி தூபமிட்ட கிறிஸ்தவ மதகுருக்களின்

மனவைராக்கியத்தையும் மாச்சரியத்தையும் கண்டு வெட்கி, வேதனைப் படாதவர்கள் எவருளர்? எண்ணூறு வருடகால ஆட்சியில் ஏற்றம் கண்டிருந்த எண்ணையும் எழுத்தையும் கண் எனக் கருதாமல் புண் என பாவித்து முஸ்லிம்களால் முன்னேற்ற மடைந்திருந்த தத்துவ ஞான, கணித சாஸ்திர, விஞ்ஞான நூல்களை தீக்கிரையாக்கிய தீய வர்களைக் கண்டு மனம் புழுங்காதவர் எவருளர்?

கி. பி. 1214ம் ஆண்டில் பிறந்த பாதிரி பேகனின் எழுத்தோ வியங்களில்தான் அரபு ஆசிரியர்களின் அறிமுகம் நமக்குக் கிடைக் கிறது. அரபு மொழியைக் கற்றறிந்த அந்த பாதிரி, அல்புமாஸர், தாபித் அபூகுர்ரா, அலீ அல்ஹகார், அல்கிந்தி, அப்ரகானஸ், அர்ஸா கிப் முதலிய அரபு அறிஞர்களை மேற்கோள் காட்டுகிறார். 'தத்துவ சாஸ்திரத்தின் தந்தை' என அவிஸென்னாவை அவர் வர்ணிக்கிறார். தமது பரீக்ஷார்த்த தத்துவ சாஸ்திரத்தின் மூலகருத்துக்களைத் தமது முன்னோரான ரோஜர்பேகனிடமிருந்து தான் பேகன் பிரபு பெற்றார். எனவே, பேகன் ஸ்தாபித்த தத்துவ ஞானமுறையின் மூலகர்த் தாக்கள் என முஸ்லிம்களை பாவிப்பது பொருத்தமும் நியாயமுமாகும்.

முஸ்லிம்களின் ராணுவ தந்திரோபாயங்களைப் பொறுத்தவரை, அவை சரித்திரத்தில் தன்னிகரற்றவையாகத் திகழ்கின்றன. ஜிப்ரால் டர்—அதன் அரபு பெயர் 'ஜபலுத்தாரிக்' (தாரிக்கின் மலை) ஜலசந்தி யிலிருந்து சிங்கப்பூர்வரை வியாபித்து விரிந்து கிடந்த அரபு சாம் ராஜ்யத்தைவிட அதியற்புதமானது அவனியில் வேறெதுவுமுண்டோ?

முஸ்லிம்களின் கடல் வெற்றிகளும் அதிசயம் தருபவை ஆகும். மார்க்கம் கொண்டுவந்த மகான் மஹ்மூது நபி (ஸல்)யின் காலத்தில் கடலைக் கண்டு அஞ்சியோடிய அரேபியர்கள் ஒரு தலைமுறைக்குள் மத்திய தரைக்கடலில் இஸ்லாமியக் கொடியை இனிது பறக்கவிட்டு கடலில் கம்பீரமாகச் சென்றனர். கடல் கடந்து சென்று நகரங்களைக் கைப்பற்றினர் அரேபியர்கள்.

யுத்தம் அல்லது வாணிப காரியங்களில் சிறிது காலம்வரை மத்திய தரைக்கடல் பிரதேசத்தில் முஸ்லிம்கள் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். அவர்களது கப்பல்களில் சில மிகப் பிரம்மாண்டவையாக விருந்தன. கி. பி. 970-ம் ஆண்டில் அப்துர் ரஹ்மான் என்னும் ஸ்பெயின் கலீபா அப்பகுதிகளில் என்றும் கண்டிராத வகையில் பெரியதொரு கப்பலைக்கட்டி, அதிலே அளவில்லாத வியாபாரச் சரக்குகளைக் குவித்துக் கீழ்த்திசை நாடுகளுக்கு அனுப்பினர். அரபுகள் மிகப்பெரிய கப்பல்கள் கட்டினர் என்பதற்கு எண்ணற்ற சரித்திரச் சான்றுகள் உள்ளன. இக்கப்பல்களைக் கண்டுதான் ஸ்பானிய கிறிஸ்தவர்கள் பெரும் கப்பல்களை நிர்மாணித்து இரண்டாவது பிலிப் காலத்தில் பெயர் பெற்றனர் என நம்பகமாகச் சொல்லப்படுகிறது.

(தொடரும்.)

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

1957-வது வருஷத்தின்

ஹமீதிய்யா முஸ்லிம் காலண்டர்

இதில் இங்கிலீஷ், தமிழ், அரபு ஆக மூன்று தேதிகளும் 3 கலர்களில் அச்சிடப்பட்டு, ஒரு மாதத்திற்கு ஒரு ஷீட்டாக 12 ஷீட்டுகள் அடங்கியுள்ளன. ஒவ்வொரு ஷீட்டிலும் தொழுகைகளின் நேரங்களாகிய அவ்காதுஸ்ஸலாத்தும் சேர்க்கப்பட்டுள்ளது. இவை சொற்ப காலண்டர்களே அச்சிட்டு வருவதால் ஜனவரி-மீ வருவதற்குள் செலவாகி விடுவது சகஜம். ஆதலால் தங்களுக்குத் தேவையுள்ள காலண்டர்களுக்கு நவம்பர் மாதத்திலேயே ஆடர் செய்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஒரு காலண்டர் விலை அணா. 10

நூறு காலண்டர்கள் விலை ரூ. 50

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

ஷாபிஈ மத்ஹபின் சிறப்புக்கள்.

(டி. எப். ஆர். மஆலி ஸாஹிப்-பாகவி)

முன்னுரை

இஸ்லாமிய சமூகத்தினரால் ஒப்புக் கொள்ளப்பட்ட ஆலிம் உலமாக்களால், இமாம் ஷாபிஈ (றஹ்) அவர்களின் பெயர், கண்ணியத்தோடும் மரியாதையோடும் பிரஸ்தாபிக்கப்படுகிறது. ஆலிம் அறிஞர்கள்-அன்னோர் ஹனபியாயினும் மாலிக்கியாயினும் ஹன்பலீயாயினும்- இமாம் ஷாபிஈ (றஹ்) அவர்களுக்கும், ஷாபிஈ மத்ஹபிலுள்ள சில விவகார மஸ்அலாக்களுக்கும் தனிப்பட்ட கௌரவம் அளித்து வருகிறார்கள்.

இந்தியா—பாகிஸ்தான் முழுவதிலும் வியாபகமாக ஹனபி மத்ஹபு பரவிப்போ யிருந்த போதிலும், ஷாபிஈ மத்ஹபுக்கு அதற்கு அடுத்த படியான ஸ்தானமும் மதிப்பும் இருந்து வருகின்றன. ஏனெனின் ஹனபி மத்ஹபை அனுஷ்டிப்பவர்கள், சில அனுஷ்டான விவகாரங்களில் சிக்கலும் சிரமமும் ஏற்படும் போது, ஷாபிஈ இமாமைப் பின்பற்றி ஷாபிஈ மத்ஹபை அனுசரித்து நடக்கலாம் என்று ஆலிம் உலமாக்கள் மார்க்கத் தீர்ப்பும் அளித்து வருகிறார்கள். எனவே, ஷாபிஈ இமாமுடைய பெயர் சொன்னதும், அவர்களின் தனி மதிப்பும் சிறப்பும் சீரிய தன்மையும் நம் ஞாபகத்துக்கு வருகின்றன.

பொதுவாக, இஸ்லாமிய உலகத்தின் பல தேசங்களில், ஹனபி மத்ஹபு பிரகாரம் அரசாக்ஷி முறை யிருந்து வந்த போதிலும், ஆங்காங்கு ஷாபிஈ மத்ஹபின் பிரகாரம் நடப்பவர்களும், அதன் பிரகாரம் பத்வா அளிப்பவர்களான உலமாக்களும் வெகு பேர் இருந்து வருகிறார்கள்.

இஸ்லாமிய ஷரீஅத்தில், இமாம்களில் அபிப்பிராய பேதம் இருப்பது முஸ்லிம் சமூகத்துக்கு நன்மையான அம்சமேயாகும். "இக்திலாபுல் அயிம்மதி, ரஹ்மதுன் லில் உம்மத்தி" (அதாவது இமாம்களுடைய அபிப்பிராயப் பிணக்கு, இஸ்லாமிய சமூகத்துக்குப் பேருளாகிய ரஹ்மத் ஆகும்) என்பது அரபுச் சொல் முதுமொழியாகும்.

பிக்ஹுடைய கிதாபுகள் அரபியிலும் பார்ஸீயிலும் உர்துவிலும் அநேகம் இருக்கின்றன. அந்த மூலாதார பிக்ஹு கித்தாபு

களில் அபிப்பிராயத் தொனியில் மிகப் பெரும்பான்மை, இமாம் ஷாபியீ (ரஹ்) உடைய தொனியாகவே சப்திக்கின்றன. அதாவது, பலப்பல மஸ்அலாக்களில் இமாம் ஷாபி (ரஹ்) அவர்கள் தனிவழியை யும் தனிப் போக்கையும் மேற் கொண்டிருக்கிறார்கள். இதற்கு அந்த இமாம் வெறும் கியாஸ் என்னும் பகுத்தறிவை மட்டும் ஆதாரமாய் கொள்ளாமல் நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய திரு மொழியாகிய ஹதீதுகளையே பேராதரவாகக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இதைக் கருதிச் சிலர், "இமாம் ஷாபிஈ (றஹ்), அஹ்லெ ஹதீதுகளுக்கு சாதகமாகவே பிக்ஹு மஸ் அலாக்களை ஸ்தாபிதம் செய்தார்கள். ஆதலின், ஷாபிஈகளுடைய மஸ்அலாக்கள் அஹ்லெ ஹதீதுகளுக்கு அதிகம் ஒத்திருப்பதுண்டு" என்று ஒருவாறு குறை கூறுவர். இது எதை அறிவிக்கிறது? இமாம் ஷாபிஈ (றஹ்), தங்களுடைய மஸ்அலாக்களுக் கெல்லாம் முற்ற முற்ற 'திருக் குர்ஆன் தலீலையும், ஹதீது ஷரீபு ஸனதையும் ஆதாரமாய் கொண்டிருக்கிறார்கள்' என்பதையே!

மேலும் "இந்தியாவிலும் பாக்கிஸ்தானிலும் மட்டும் தான் ஹனபியாக்கள் பெரும்பான்மையாய் இருக்கின்றனர். ஆனால் உலகத் தின் இதர இஸ்லாமிய நாடுகளில் ஷாபியாக்கள் அதிகமாய் காணப் படுகின்றனர்" என்றும் ஒரு சாரார் கூறுகின்றனர். ஆம்! சிலோன் எனும் இலங்கையிலும், மலையாள கேரள நாட்டிலும், தென் இந்தியப் பல ஊர்களிலும் ஷாபிஈ மத்ஹபு தோழர்கள் பெரும்பான்மை யிருப் பதைக் காண்கிறோம்.

எது எவ்வாறாயினும் இமாம் ஷாபிஈ (றஹ்) அவர்களுக்கு, பிக்ஹு துறையிலும் இஸ்லாமிய சமூக வாழ்விலும் தனிப்பட்ட கௌரவமும், சிறப்பும், புகழும் பேரும் இருந்து வருகிற தென்பதில் சந்தேகமில்லை. ஆகவே யாம் இங்கு இமாம் ஷாபிஈ (றஹ்) அவர்க ளுடைய சீரிய சரிதையை சுருக்கமாய் எடுத்தெழுத நாடியுள்ளோம். இதற்கு எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிப்பானாக.

(றஹ்மத் பாகவி)

இமாமின் வம்சச் சிறப்பு.

இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களுடைய நஸப் என்னும் வம்சச் சிறப்பு ஒட்டிய 'சில்சிலா' பின் வருமாறு :—

இமாம் அபூ அப்துல்லாஹ் முஹம்மத்-இப்னு இத்ரீஸ்-இப்னுல் அப்பாஸ்-இப்னு உதுமான்—இப்னுஸ் ஸாயிப்-இப்னு உபைதா— இப்னு அப்து-இப்னு ஹாஷிம்-இப்னு அப்துல் முத்தலிப்-இப்னு அப்து முனப் என்பதாகும். அதாவது 'அபூ அப்துல்லாஹ்' என்று சுயப் பெயருடைய ஷாபிஈ இமாமுடைய வம்ச பூர்வீகம், நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்

லம்) அவர்களுடைய திருக் குலமாகிய குரைஷ் வம்சத்துடன் போய்ச் சேருகிறது.

வம்சா வழிப் பெயர்களில் காணப்படும் அஸ்ஸாயிப் என்ற பெய ருடைய பாட்டனர் அவர்கள், நபித் தோழராகிய ஸஹாபியாவர். இவர் பத்ரு யுத்தத்தின் போது, தீனுல் இஸ்லாத்தைத் தழுவி முஸ் லிமானவ ராவர். இவருடைய புத்திரரான 'ஷாபிஃ' எனப் பெயருடை யார், நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களைக் கண்ணுல் தரிசித்த பாக்யம் பெற்ற இளைஞரா யிருந்தார்.

இமாமுடைய பாட்டனர்களில் ஒருவர் பிரஸ்தாப ஷாபிஃ என்ற பெயருடையவரா யிருந்ததால், அதை யொட்டிய 'நிஸ்பத் தாக' இமாமுக்கு 'ஷாபிஈ' என்ற குலப் பட்டபெயர் வழங்கலாயிற்று.

இமாம் ஷாபிஈயை 'முத்தலபீ' என்றும் சிறப்புறச் சொல் வார்கள். ஏனெனில், இவர்களது ஆதிப் பாட்டனர் அப்துல் முத்தலிப் இப்னு அப்து முனுப் ஆவர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய திருப்பாட்டனரும் இந்த அப்து முத்தலிபே யாவர். இமாம் அவர்களுடைய தாயார் வழி சில்சிலாவும் முத்தலிப் வம்சத் தையே போய்ச் சேருகிறது; அதாவது தாயாருடைய பாட்டனு ராகிய அப்து யஜீத் பின் ஹாஷிம் என்பாரின் தாயார் அப்து முனுபு டைய புத்திரராகிய ஷஹாஷிமுடைய மகளாராவர். மேலும் இன்னெரு பாட்டனராகிய ஷாபிஃ என்பாருடைய தாயார்—அஸத் பின் ஹாஷீ முடைய புத்திரி யாவர்; இப்பெண்மணியின் பெயர் 'கல்தா' என்ப தாகும். இந்த அம்மை, ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களுடைய தாயாராகிய பாத்திமா பின்த் அஸத்வுடைய சகோதரியாவர்.

மேலும் "இமாம் ஷாபிஈ வுடைய தாயார்-உம்முஹஸன் ஹூமைரா பின் யஜீத் பின் ஹஸன் பின் அலீ பின் அபீதாலிப் உடைய புத்திரியாவர்" என்று சில சரித்திராசிரியர் எழுதி வைத் துள்ளார்கள். இந்த வம்சாவளி விபரமெல்லாம் கூறப்படுவதன் கருத்து: இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் நபி (ஸல்) அவர்களுடைய குடும்பமாகிய அஹ்லெ பைத்தைச் சேர்ந்தவர் என்பதை எடுத்துரைப் பதே யாகும்.

மேலே பிரஸ்தாபிக்கப்பட்டவரான—இமாம் ஷாபிஈ (ரஹ்) உடைய பாட்டனருமான ஷாபிஃ பின் ஸாயிப் என்பார், பத்ரு யுத் தத்தில் அதாவது ஹிஜ்ரீ 3-ம் ஆண்டின் நிகழ்ச்சியில், மக்காவாசி பனுஹாஷிம் சேனையின் துவிஜம் (கொடி) தாங்கும் வீரராயிருந்து அக்காலே சமூக சேவை புரிந்துள்ளார். இவர் அப்போது எதிரிக் கூட்டத்தில் இருந்ததால், மதீனவாழ் முஸ்லிம்கள் படையெடுத்துச் சென்ற சமயம், முஸ்லிம்களால் கைதியாக பிடிக்கப்பட்டிருந்தார். ஷாபிஃ பின் ஸாயிப் இங்கு பிடிபட்ட பின்னர், 'பித்யா'வாக விடுதலைப் பணம் கொடுத்து தம்மை விடுவித்துக் கொண்டு, பிறகு மனப்பூர்வ

மாய் தீனுல் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டு முஸ்லிமானுர் என்று வேறு சில சரித்திராசிரியர்கள் எழுதி வைத்துள்ளனர்.

பிறப்பு வளர்ப்பு

இமாம் ஷாபிஈ (ரஹ்மத்துல்லாஹி அலைஹி) அவர்கள், ஹிஜ்ரீ 150-ம் ஆண்டில் பிறந்தார்கள் என்று, இஸ்லாமியச் சரித்திராசியர்கள் எழுதி வைத்திருக்கிறுர்கள்.

இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள், பரிசுத்த புண்யஸ்தலமாகிய மக்கா முஅல்லமா நகரில்தான் பிறந்தார்கள். இவ்விஷயத்தில் சரித்திராசிரியர்களும் ஆராய்ச்சியாளர்களும் ஏகோபித்த அபிப்பிராய முடையவர்களாகவே இருக்கின்றனர். ஆனுல் அவர் குறிப்பாக எந்தப் பிரதேசத்து, எந்தப் பகுதியில் பிறந்தார்கள் என்பதில் அபிப்பிராயபேதமுண்டு. மினு என்ற பகுதியில் பிறந்தார்கள் என்று ஒருசாராரும், யமனில் பிறந்தார்கள் என்றெரு பிரிவாரும், குஸ்ஸா என்ற இடம் அவர்களின் பிறப்பிடம் என்றெரு திறத்தாரும் கூறுகின்றுர்கள். இந்தப் பிரதேசங்களெல்லாம் மக்கா நகரம் அமைந்துள்ள ஹிஜாஸ் (அரபு) நாட்டை அடுத்த பிரதேசங்களேயாம். ஆகையால், இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள், அசல் அரப் வம்சத்தினர் என்பதில் அபிப்பிராய பேதமில்லை.

கல்விப் பயிற்சியும் ஒழுக்கமும்

இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள், பிறந்து வளர்ந்த நாடு ஒன்று; கல்விப் பயிற்சியும் ஒழுக்க சீலமும் பெற்ற நாடு மற்றென்று. பெரும்பாலும் புனித மக்கமா நகரிலேயே இமாம் ஷாபிஈ அவர்கள் கல்வியும் ஒழுக்கமும் பெற்று கலா நிபுணராகவும் குணசீலராகவும் ஆனுர்கள்.

"வளரும் பயிர் முளையிலேயே தெரியும்" என்று முதுமொழி கூறுகிறுேமே அவ்வாறு, இமாம் ஷாபிஈ (ரஹ்) அதிபால்யத்திலே அறிஞராய் விளங்கினுர்கள். யார் இவரைக் கண்ட போதிலும் "இந்தப் பிள்ளாண்டான் வருங்காலத்தில் மகா கெட்டிக்காரனுவான்; இவனுல் உலகத்துக்கு மிகுந்த பிரயோஜனம் உண்டாகும்" என்று வரும் பொருள் உரைப்பார்கள்.

எனவே, இமாம் அவர்கட்கு வயது ஏழுதான் இருக்கும். இத்துணைச் சிறிய பால்ய வயதிலேயே, 'ஹாபிலுல் குர்ஆன்' ஆக ஆய்விட்டார்கள். திருக் குர்ஆனின் முப்பது ஜுஸுக்களையும் 114 ஸூராக்களையும் 6666 ஆயத்துகளையும் மனனம் பண்ணி மனப்பாடமாய் ஒப்பிக்கும் மகா பாக்கியம் பெற்றவர்களானுர்கள்.

அதுமட்டுமல்ல. தமது 12-ம் வயதில் 'முஹத்திஸ்' என்ற நற்பெயரும் பெற்றுர்கள். அதாவது நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது திருவாய் மொழி—திருச் செயல் வரலாறுகளாகிய ஏராளமான ஹதீது—ரிவாயத்துக்களை மனப்பாடம் பண்ணி,

அவைகளின் 'நேர்மை' பற்றி ஆராய்ச்சி செய்து, அபிப்பிராயம் கூறும் திறமை யுடையவர்களானார்கள். அதாவது இமாம் மாலிக் (ரஹ்) உடைய "முஅத்தா" என்னும் ஹதீது கிரந்தம் முழுமையை யும்பாடம் பண்ணி ஒப்பிப்பவர்களா யிருந்தார்கள்.

அக்காலத்தில் திரு மக்கா நகரில் 'முஸ்லிம் பின் காலித் ஸன்ஜி' என்ற பெரியார், இஸ்லாமிய மார்க்கச் சட்டங்களின்படி தீர்ப்பு அளிக் கும் (ராஜாங்க—சமுதாய) "முப்தீ"யாக இருந்து வந்தார்கள். இப் பெரியாரிடத்திலே நமது இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள், இஸ்லாம் மத அனுஷ்டானச் சட்டக் கலையாகிய 'பிக்ஹு மஸ்அலாக்' களைக் கற்றுத் தேர்ந்தார்கள்.

அஃதெல்லாம் பால்யத்தில்—பதினைந்து வயதுக்கு முன்னரே நிறைவேறி விட்டது. எனவே, பதினைந்தாம் ஆண்டு தொடுத்து தமது உஸ்தாதை யனுசரித்து, தனியாக 'பத்வா' கொடுக்கவும், மார்க்க சம்பந்தமான விவகாரங்களில் தீர்ப்பளிக்கவும் தொடங்கி விட்டார்கள். பிறர் புத்வாக்களை சரிபார்த்து கையெழுத்து செய்யவும் தொடங்கி விட்டார்கள். இதற்கு உஸ்தாதாகிய முஸ்லிம் பின் காலித் ஸன்ஜி அவர்களே, நம் இமாமுக்கு 'இஜாஸத்' என்னும் ஆக்ஞா பத்திரமும் வழங்கி யிருந்தார்கள்.

இந்தக் காலத்தைப் போல் அந்தக் காலத்தில் 'பத்வா' கொடுப் பது அவ்வளவு இலேசான காரியமாக இருக்க வில்லை. இக்காலத்தில், ஒரு ஆலிம் சாஹிப், பத்வா கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட் டால், 'துர்ரு முக்தார்' என்ற கித்தாபையோ, பத்தாவா ஆலம்கீர்' என்ற நூலையோ பார்வையிட்டு 'மஸ்அலா'வை எடுத்தெழுதி 'நக்கல்' செய்து அதன் கீழ் தைரியமாக கையெழுத்துப் போட்டுவிடுகிறார்; சில சமயம் சீல் முத்திரையும் போட்டுத் தருகிறார்.

அந்தக் காலத்தில் துர்ரு முக்தாரும் கிடையாது; பத்தாவா ஆலம் கீரும் கிடையாது. எந்த மஸ்அலாவாயினும், இமாம்கள் எனப்படும் முஹத்திஸ்கள், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அரிய மொழிகளான ஹதீதுகளின் நேர்மையான ஆதாரங்களைக் கொண்டே 'முடிவு' செய்து, ஜனங்களுக்கு கூறுவார்கள். இப்படிப் பட்ட மதச்சேவை எல்லோராலும் முடியக்கூடிய காரியமா யிருக்க வில்லை. ஹதீதுக் கல்வியில் மிகவும் ஆராய்ச்சியும் தேர்ச்சியும் உள்ள வர்களேதான் இத்துறையில் சேவை செய்ய முடியும். இக்கால ஆலிம்கள், கேட்பவர்களுக் கெல்லாம், துண்டுக் காகிதத்தில் 'பத்வா' எழுதிக் கொடுத்து விடுகின்றனரே, அப்படி யில்லை அக்காலத்தில்.

இக்கால 'முகல்லித்' என்றும் 'கைர்—முகல்லித்' என்று ஓரிரு சாரார் கூறப்பட்டு வருகின்றனர். முகல்லித் என்றால் எந்த இமாமை யேனும், எந்த வழிகாட்டியையேனும் பின்பற்றி நடந்து ஒழுகு பவரைப் பற்றி சொல்லப் படுகிறது. 'கைர் முகல்லித்' என்றால், இமாம்களுடைய மஸ்அலாக்களைப் பின்பற்றாமல் நேரடியாக ஹதீது

ஆதாரங்களையும், குர்ஆன் கட்டளைகளையும் பின்பற்றி ஒழுகுபவரை பற்றிச் சொல்லப்படுகிறது.

'தக்லீத்' என்பது என்ன?

'தக்லீத்' என்ருல் நிர்ணயங் கொண்டு பின்பற்றி ஒழுகுதல் என்று பொருள். எனவே, தக்லீத் செய்யாதவர்கள் 'கைர் முகல்லித்' களாவர். இவர்கள், அஹ்லெ ஹதீதுகளென்றும், அஹ்லெ குர்ஆனிக ளென்றும் சொல்லப்படுகின்றனர். இன்னேரைச் சிலர், 'ஸுன்னத்து' ஜமாஅத்தைச் சேராதவர்களென்றும் கூறுகின்றனர். அவர்களை இதைப் பற்றிக் கேட்டால் "நாங்கள்தான் உண்மையில் ஹதீது என்னும் ஸுன்னத்தின்படி நடப்பவர்கள்" என்று பெருமையுடன் கூறிக் கொள்கின்றனர்.

எனவே, முற்காலத்தில், இமாம்களும் முஜ்தஹித்களும் மட்டும் தான், தீனுல் இஸ்லாமின் அனுஷ்டான முறை என்னும் மஸ்அலாக்களை தெண்டித்துத் தெளிவு படுத்தித் தீர்ப்பு கூறுபவர்களாய் இருந்து வந்தனர்; இவர்கள் 'ஹதீது—குர்ஆன் மூலாதாரத்தை சிரமேற் கொண்டு நடப்பவர்களாயும் இருந்து வந்தனர். (தொடரும்)

முதல்லல் கோஷா நாமா

(புதிய பதிப்பு)

கோஷா பர்தா விஷயத்தைப் பற்றி ஹக் தஆலாவின் கலாமாகிய தலீல்களிலும் நமது நபிநாயகமவர்களின் திருமொழியாகிய ஹதீதுகளிலும் வந்திருப்பவைகளைக் கல்விக் கடல்களாகிய முஹத்திஸின்களும், முபஸ்ஸிரீன்களும், முஜ்தஹிதீன்களும் தெண்டித்து விபரித்தெழுதி யிருப்பவைகளில் சிலதை சுருக்கமாக சேகரித்தெழுதி **முதல்லல் கோஷா நாமா** வென்று பெயர் வைத்து தற்கால ஆலிம் மவ்லவிகளில் மஹான்களாகிய பத்து உலமாக்கள் பார்வை யிட்டு அச்சிடப் பட்டது. இவைகளெல்லாம் வசனமாகக் கூறப்பட்டு இருக்கின்றன.

பின்பு இவைகளெல்லாம் சுலபமாக மனதில் வைத்துக் கொள்ளும் பொருட்டு பாடல்களாக போடப்பட்டு இருக்கின்றன.

இதன் விலை அணு. 8

ஷை அறபுத் தமிழ் விலை அணு. 12

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ், 5.

(24-வது பகுதி)

திருக் குர்ஆன் : : : : : : : : சார சங்கிரஹம்

பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஷ்மத் பாகவி)

மூஸா நபி-கில்ரு (அலை) சந்திப்பில் அரிய படிப்பினை.

(எல்லாம் அறிந்தவனான இறைவன், ஹஜ்ரத் மூஸா நபிக்கு, ஹஜ்ரத் கில்ரு (அலை) என்னும் மகாத்மாவை போய்ப்பார்த்துப் பேசும்படி, வஹீ அனுப்பி கட்டளையிட்டான். இதற்குக் காரணம் யாதெனின்: மூஸா நபி, அறிவாற்றலிலும் வாக்குவன்மையிலும் கெட்டிக்காரராய் இருந்தார், ஆயினும் சற்று கர்வம் என்னும் மமதை (அனானியத்) உடையவராக யிருந்தார். எல்லாம் வல்ல இறைவன், அதைக் கர்வபங்கம் செய்து, மூஸாநபிக்கு தன்னடக்கம் என்னும் பெருந்தன்மையை, வேறோர் மகா அறிஞர் வாயிலாக கற்பிக்கவேண்டு மென்று ஓர் உபாயம் செய்தான். அதாவது: மூஸாநபி, ஒருமுறை பொதுஜனக் கூட்டத்திற்கு வஅலு உபதேசம் என்னும் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். நபியவர்களின் உபதேச மொழிகள் மகா மேதா விலாசமுடையதாய்—தத்துவார்த்தமாய் இருந்ததைக் கண்ட ஒரு மனிதர், “நபியே, தங்களைவிட மகா வித்வான் யாரேனும் இருக்க முடியுமா?” என்று கேட்டார். அதற்கு மூஸா நபி தானென்னும் அனானியத்தில் மயங்கி, “என்னைவிட மகா அறிவாளி வேறுயாருமே இல்லை” என்று பெருமையோடு கூறினார்கள். நபி மூஸா (அலை) இவ்வாறு அகந்தைகொண்டு கூறியது ஆண்டவனுக்குத் திருப்திப்பட வில்லை. எனவே வஹீமூலம் அறிவுறுத்தி, “மஜ்மவுல் பஹ்ரைன்” என்னும் (இரண்டு சமுத்திரங்கள் சந்திக்கும்) இடத்தில், மகாப் பெரும் அறிவாளியும் தீர்க்க திருஷ்டி யுடையவருமான மகாத்மாவாகிய ‘கில்ரு’ என்பவரைப் போய்க் காணுமாறு கட்டளையிட்டதற் கேற்ப, ஹஜ்ரத் மூஸா நபி, தம்முடன் துணைக்கு ஓர் இளவாலிபரான யூஷுஉ பின் நூன் என்பாரை அழைத்துக் கொண்டு, (தற்போது எகிப்து—இஸ்ராயீல் யுத்தம் நடக்கும் பிரதேசமாகிய) ஸீனா தீபகற்பம் நோக்கிப் புறப்பட்டார்கள். சந்திப்பின் விபரம் பின்வருமாறு:—)

“அந்த இருவரும், எம்முடைய அடியார்களில் ஒரு நல்லடியாரை (கில்ருவை) சந்தித்தார்கள்; அவர் (அறிவாற்றலினால்) நாம் நல்லருள் பாலித்தவராய் இருந்தார். மேலும் அவருக்கு நாம் விசேஷ மான (தூரதிருஷ்டி) ஞானசக்தியையும் எம்மிடமிருந்து கொடுத் திருந்தோம். எனவே (இங்ஙனம்) மூஸா (நபி ஹஜ்ரத்) கில்ருவை நோக்கி, “தாங்கள் அனுமதி கொடு(ங்கள்; அப்படிக்கொடு)த்தால்,

நான் தங்களோடு சேர்ந்து வருகிறேன். தங்களுக்கு (ஆண்டவனால்) கற்பிக்கப்பட்டிருக்கிற இல்மு (என்னும் வித்தை)யிலிருந்து, கொஞ்சம் எனக்கும் கற்பித்துக் கொடுங்கள்" என்று வேண்டிக் கொண்டார். அதற்கு (கில்ரு—அலை) அவர்கள், "(ஏ மூஸாவே), நீவிர் எம்முடன் இருந்து (ஏதேனும் நிகழ்ந்தால்) பொறுமையுட னிருக்க இயல மாட்டீர்" என்று கூறினார்கள். அதைக்கேட்டு (மூஸா நபி) அவர்கள், "இன்ஷா அல்லாஹ் (ஆண்டவன் நாடுவானானால்) என்னைத் தாங்கள் பொறுமைக்காரனாகக் காண்பீர்கள். என்னிடமிருந்து தாங்கள் எத்தகைய முரண்பாட்டையும் காணமாட்டீர்கள்" என்று கோரிக் கொண்டார்கள். மேலும் (ஹஜ்ரத் கில்ரு) அவர்கள், (மூஸா நபியை நோக்கி) "என்னுடன் நீவிர் இருந்து (ஏதேனும் கற்றுக்) கொள்ள வேண்டுமாயின், நான் புரியும் எந்த விஷயம் பற்றியும் (தர்க்கரீதியாய்) கேள்வி ஏதும் கேட்கக்கூடாது; (சுயமே) நானாகவே உமக்கு விளக்கம் கூறுதவரை மௌனமாக இருக்கவேண்டும்" என்று (தாக்கீது செய்து) கூறினார்கள். (மூஸா நபி, இணக்கம் தெரிவித்தார்கள்.)

(கில்ரு நபி இங்ஙனம் போதனை செய்த பின்னர்) அந்த இருவரும் (சமுத்திரம் தாண்டி ஒரு தீவுக்குப்) போகத் தொடங்கினார்கள். எனவே இருவரும் (வாடகைப்) படகில் ஏறிக்கொண்டார்கள். (படகு நடுநீரில் போய்க் கொண்டிருக்கும்போது ஹஜ்ரத்) கில்ரு அவர்கள், அந்தப் படகைத் துளைத்து (ஓட்டை செய்து) விட்டார்கள். (இச்செயலைக் கண்டு பொறுமை யிழந்த) மூஸா (நபி) "இதென்ன? விபரீதம் செய்து விட்டீர்களே; படகும் ஏறி இருப்பவர்கள் எல்லோரும் மூழ்கிப் போவதற்கா இத்தக்காரியம் செய்தீர்கள்?" என்று (பதற்றத்துடன்) கேட்டார்கள். அதற்கு (கில்ரு—அலை) அவர்கள் "ஏ மூஸாவே, நான் அப்போதே உமக்குச் சொல்லவில்லையா? நீவிர் எம்முடன் சேர்ந்திருப்பதற்கு பொறுமை யாற்றல் பெற்றிருக்க மாட்டீர் என்று" எனக் கண்டித்தார்கள். எனவே மூஸா (நபி மிகவும் பணிவுடன்) "ஆம், எனக்கு (ஞாபகப்) பிசகு ஏற்பட்டு விட்டது; என் மறதிக்கு என்னை (குற்றம்) பிடிக்காதீர்கள். என் இச்செய்கைக்காக என் மீது கடுமையை செலுத்தாதீர்கள்" என்று வேண்டிக்கொண்டார்கள். (அதற்கு ஹஜ்ரத் கில்ரு நபியும் இணங்கிக் கொண்டார்கள்.)

பிறகு (கில்ரு நபி, மூஸா நபி) இருவரும் (அந்தப் படகை விட்டும் இறங்கி, தரைவழியே) மேலும் நடந்து சென்றார்கள். எனவே அங்கு (வழியில்) அவ்விருவரும் ஒரு சிறுவனைக் கண்டார்கள். (கண்டதும்) (ஹஜ்ரத்) கில்ரு (அவர்கள், ஒரு முகாந்தரமு மில்லாமலே) அந்தச் சிறுவனை (ப் பிடித்துக்) கொன்று போட்டார்கள். மூஸா (நபியினால், இதனைக் கண்டு சும்மா இருக்க முடியவில்லை.) "இதென்ன, ஒரு நிரபராதியை, ஒரு குற்றமும் இழைக்காதிருக்கையில், (பாலனைக்) கொன்று போட்டு விட்டீர்களே; தாங்கள், கொஞ்ச

மும் விரும்பத் தகாத ஒரு (கொடுங்) காரியம் செய்து வீட்டீர்களே" என்று (பதற்றத்தோடு) கூறினர். இதைக் குறித்து (ஹஜ்றத் கில்ரு) அவர்கள் "நான் உமக்கு அப்போதே சொல்ல வில்லையா? என்னுடன் சேர்ந்திருப்பதற்கு நீவிர் பொறுமை (என்னும் ஆற்றல்) பெற்றிருக்க மாட்டீர் என்று" எனக் (கண்டித்துக்) கூறினார்கள். எனவே மூஸா (நபி மிகப் பணிதலுடன்) "இனி மேல் நான் உங்களை (எதிர்த்துப் பேசி) ஏதேனும் (கேள்வி) கேட்பேனுல், தங்கள் தோழமையி லிருந்து என்னை விலக்கி விட்டுவிடுங்கள்; தங்கள் காரிய காரணம் மிகவும் நேர்மையாகவே இருக்கும்" என்று வேண்டிக் கொண்டார்கள்.

அதன் பிறகும் அவ்விருவரும் (மேற் கொண்டு, எங்கோ) போய்க் கொண்டிருந்தார்கள். அப்போது ஊர்ஜனங்களிடம் (ஓர் ஊருக்குள்) போய்ச் சேர்ந்தார்கள். (மிகப் பசி—தாகத்தோடு இருந்த) இவர்கள், ஊர்காரர்களிடம், ஏதேனும் பசியாறுவதற்கு (ஆகாரம்) கேட்டார்கள். அதற்கு அந்த ஜனங்கள் (கொஞ்சமும் இரக்கமின்றி) ஒன்றும் (உணவு) கொடுக்காமல் மறுத்து (விரட்டி) விட்டார்கள். ஆயினும், (ஹஜ்றத் கில்ரு) அவர்கள், அதே ஊரைச் சேர்ந்தவர்களின் ஒரு (வீட்டுச்) சுவர் (சரிந்து) விழுந்து கொண்டிருப்பதைக் (கண்டார்கள்;) கண்டதும், உடனே (அருகில் போய் மண் வெட்டி, குழைத்து) அந்தச் சுவரை (புதுப்பித்து) நிறுத்தி வைத்தார்கள். இங்ஙனம் (உண்ணவோ குடிக்கவோ ஏதும் தர முடியாது மறுத்து விட்ட கல் நெஞ்சர்களான அந்த ஊர்காரர்களுக்கு சாதகமாய், ஹஜ்ரத் கில்ரு அவர்கள் பரோபகாரம் செய்ததைக்) கண்ட மூஸா (நபி) அவர்கள், (ஹஜ்றத் கில்ரை நோக்கி) "இந்த சிரமமான வேலைக்காக, இந்த ஊர்காரர்களிட மிருந்து நாம் கூலியாவது வாங்கியிருக்க வேண்டுமே; (அதை விட்டு, நன்றி கெட்ட ஜனங்களுடைய சுவரை ஏன் மராமத்து செய்தீர்கள்?)" என்று (கேள்வி) கேட்டார்கள். அதற்கு, (கில்ரு) அவர்கள், (மூஸா நபியை மிகவும் கோபித்து) "இனி உமக்கும் எனக்கு மிடையில் பிரிவினை (நிச்சயம்) தான். (நீவிர் என்னுடன் இருப்பதற்கு கொஞ்சமும் பொறுமை இல்லாதவராய் விட்டீர்). ஆயினும், எக்தெந்த விஷயங்களுக்காக–(என்னுடைய கிருத்தியங்களுக்காக) நீவிர் பொறுமை இழந்து (கேள்விகள் கேட்கத் தொடங்கி) விட்டீரோ, அந்த விஷயங்களின் அந்தரங்க ரகசியத்தை நான் உமக்கு (இப்போது) எடுத்துக் கூறி விடுகிறேன்; கேட்டுக் கொள்ளும் :—

(1-வது) அந்த படகு, (நான் துளைத்து பழுது செய்து விட்டேனே அந்தப் படகானது) சமுத்திரத்தில் (படகோட்டிப்) பாடு பட்டுப் பிழைக்கும் சில (பரம) ஏழைகளுடையதாகும்; அதை வழி மறித்து தண்டக்காரர்கள் பிடித்துக் கொள்ளா திருக்கட்டும் என்றே, அவ்வாறு செய்து விட்டேன். ஏனெனின், சற்று தூரத்தில் (கொடுங்

கோலாட்சி புரியும்) ஒரு அரசன், அந்த வழியே போகும் படகு (கப்பல்)களை, பலாத்காரமாய் வழி மறித்து (தண்டப்பணம்) பிடுங்கிக் கொள்வான். (அவனை விட்டும் காப்பதற்காகவே அப்படிச் செய்தேன்.) (2-வது): அந்தப் பையன் (நான் காரணங் கூறுமல் கொன்று போட்டேனே அந்தச் சிறுவன்) உடைய தாய்—தந்தையர் ஈமானுள்ள வர்கள்; (உத்தமர்கள்). அந்தப் பையன் பெரியவனாய் (காபிராக விளங்கி) அப்பெற்றோரை (க் கொலை செய்து விடுவான்; அல்லது) இம்சித்துக் கஷ்டங்கள் கொடுப்பான் என்று (தூரதிருஷ்டி ஞானத் தால்) எனக்குத் தெரிய வந்தது. எனவே நான் அவனை அப்போதே (கொன்று, அவர்களுக்கு உதவி புரிய வேண்டு மென) அப்படிச் செய்யலானேன். (இது மட்டுமல்ல;) அப்பெற்றோர்களுடைய இரக்ஷகன் (அல்லாஹ்), அவர்களுக்கு அந்தப் பையனுக்குப் பகரமாக—தூய ஆத்மாவும் அன்பு விசுவாசமுடைய நல்லதை (ஒரு சத்புத்திரனை)க் கொடுக்கப் போதுமானவனாக இருக்கிறான். (3-வது:) அந்த சுவர் (பசிக்கு உணவு தராதவர்களின் ஊரில் நான் புதுப்பித்து வைத்த சுவர்) இரண்டு யத்தீம் (அனாதைப்) பிள்ளை யுடையதாகும். அந்த சுவருக்குக் கீழே (பூமியில்) புதையல் (பொக்கிஷம்) இருக்கிறது; அந்தப் பிள்ளையுடைய (இறந்து போன) தந்தை ஓர் உத்தம (பக்த)ராக இருந்து வந்தார். எனவே, உம் முடைய (நம்முடைய) இரக்ஷகனின் சித்தம் யாதெனின்: அவ்விரு (அநாதைச்) சிறுவர்களும் பெரியவர்களாகி (வாலிப வயதை யடைந்து) தங்களுக்கு (உரித்தான) அந்த பொக்கிஷத்தை, ஆண்டவனருளால் தோண்டி எடுத்துக் கொள்வார்கள் என்பதாகும். புதையல் பாதுகாப்பு நோக்கங் கொண்டு தான் நான் அந்த குட்டிச் சுவரை எழுப்பி நிறுத்தினேன்."

(மேலும், ஹஜ்ரத் கில்ரு (அலை), மூஸா நபி (அலை)க்குக் கூறிய சமாதான மொழியாவது :—ஏ மூஸாவே, இதை யெல்லாம் யான் என் சொந்த (கற்பனை—யூகக்) கருத்து கொண்டு செய்யவில்லை. (சர்வக்ஞனை இறைவன் ஞானத்தையக் கட்டளை யிட்டே செய்தேன்). இவை தான் (நான் புரிந்த அந்தச் செயல்களுக் குரிய) அந்தரங்க தாத்பரியம்; (இதனை யறியாத—ஆற்றாமையில் தான்) நீர் இவற்றைக் கண்டு பொறுமை இழந்து (கேள்விகள் கேட்கத் துணிந்து) விட்டீர்.

(இந்த அபூர்வச் சம்பவம், ஆழ்ந்த தாத்பரியம் பொருந்திய சம்பவங்களைக் காட்டியே, எல்லாம் வல்ல இறைவன், மகா அறிஞரான கில்ரு நபியின் வாயிலாய், மூஸா நபிக்கு அறிவு புகட்டி, ஆண்டவ னுடைய கிருபையால், 'உலகில் அறிவாளிகளை விட மகா அறிவாளி ஒருவர் எங்கேனும் இருக்கவே செய்கிறார்' என்றதை பகிரங்கப்படுத்தி வைத்தான். வல்லாஹு அஃலம்-ஆண்டவன் மிகவும் அறிந்தவன்) (ஜுஸு: ஸுப்ஹானல்லதீ: ஸூரா: அல்கஹபு; ருகூஃவுகள்: 9, 10.)

* ஏமாற்றம்! *

மாஸ்டர் ஹாரிஸ் பாபு

(2–வது பகுதி தொடர் கதை)

"சரி போகிறேன். நீ போய் சாயிந்திரத்துக்கு வா." என்று கூறி கரீமை அனுப்பி விட்டு உடைகளை மாற்ற துணி பெட்டியைத் திறந்தான், ரபீக்.

அப்துர் ரஹ்மான் சாயபு பெரிய பணக்காரர். ஆனால் அவரை அறியாதவர்கள் யாரும் அவரைப் பணக்காரர் என்று கூற மாட்டார்கள். அவ்வளவு ஏழ்மையாகக் காணப்படுவார்; யாரிடமும் தாழ்மையாக உரைப்பார்; அன்பாகப் பேசுவார்; பணமிருக்கிற தென்று பெருமை கொள்ள மாட்டார். அம்மாதிரியான நற்குண சீலரின் மகன் தான் ரபீக். தந்தைக்கு நேர்மாறான குணமுடையவன். கள் குடித்தல், சீட்டாடல், காணும் பெண்களைத் தன் காம வலையில் சிக்க வைத்தல் முதலிய தீய காரியங்கள் யாவும் அவனுடைய பொழுது போக்குகள். அவனை நல்வழியில் கொண்டு வர, அவன் பெற்றோர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிக ளெல்லாம் வீணாயின.

சுருள் சுருளாகப் படிந்திருக்கும் தன் கிராப்பை 'கலிபோர்னியா பாப்பி' கூந்தல் தைலத்தைத் தடவி நன்றாக வாரி விட்டுக் கொண்டான். பளபளக்கும் 'பின்னி' துணியில் தைய்க்கப்பட்ட கருப்புக் கலர் 'புஷ் ஷர்ட்'டும், வெண்மையான 'டைய்'யும், பாதாம் கலர் 'பேண்டு'ம், பிரவ்ன் கலர் 'பாடா' 'ஷூ'வும், 'ரேடியம் டெய்யல்' பதித்த 'அங்கோரா' கைக் கடியாரமும், தங்க 'பிரேம்' போட்ட கூலிங் கிளாஸும் அணிந்து கொண்டு, ரோஜா புஷ்ப வாசனையைத் தரும் அத்தரைப் பூசிக் கொண்டான்; கை விரல்களில் தங்க மோதிரங்கள் ஆறும் சரியாக இருக்கின்றனவா எனப் பார்த்து விட்டு சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பினான், ரபீக்.

சைக்கிள் நேராக உம்மஹானி வீட்டினருகே வந்து நின்றது. அதைச் சுவற்றோரமாக நிற்பாட்டி விட்டு வீட்டினுள் சென்றான். அவன் நடக்கும் போது, 'ஷூ'வின் அடியில் அடிக்கப்பட்டிருந்த குண்டாணியும், சிமென்ட் தரையும் சேர்ந்து குதிரைச் சப்தத்தை உண்டு பண்ணின. வெளி வாயற் கதவு திறந்திருந்தது; உள் கதவு மூடப்பட்டிருந்தது; தட்டினான்.

உள்ளே ஹாலில் அளவளாவிக் கொண்டிருந்த உம்மஹானியும், நூர்ஜஹானும் 'யார்?' என்ற கேள்விக் குறியுடன் ஒருவரை ஒருவர்

பார்த்துக் கொண்டனர். பிறகு, "கதவைத் திறந்து யார் வந்திருப்பது பார், ஷபீர்" என்று தன் தம்பிக்குக் கட்டளை யிட்டாள் உம்மஹறானி.

கதவைத் திறந்து பார்த்த ஷபீர் "ரபீக் பாய் வந்திருக்கிறார்" என்று கத்தினன்.

"உள்ளே கூப்பிடு" என்று கூறி விட்டு நூர்ஜஹானுடன் அறைக்குள் சென்றாள், உம்மஹறானி. ரபீக் உள்ளே பிரவேசித்தான். "வா அண்ணு" என்று உம்மஹறானி, அவனை வர வேற்றாள்.

அங்கு போடப்பட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்தான் ரபீக். ஒரு சிகரெட்டை எடுத்து பற்ற வைத்துக் கொண்டு "எங்கே உன் அம்மாவைக் காணவில்லை?" என்று கேட்டான்.

"உங்க வீட்டுக்குத் தான் போய் இருக்கிறாங்க" உம்மஹறானி பதிலளித்தாள்.

"நீ தனியாகத் தான் இருக்கிறாயா?"

"இல்லை, என்னுடன் என் சினேகிதை நூர்ஜஹானும் இருக்கிறாள்"

"எம்மா நூர்ஜஹான், சௌக்கியந்தானே?"

"ஆண்டவன் கிருபையாலே சௌக்கியந்தான், அண்ணு!" நூர்ஜஹான் பதில் கூறினாள்.

கையிலிருந்த துண்டு சிக்ரெட்டைக் கீழே போட்டு அதைப் பூட்ஸ் காலால் நெருடிக் கொண்டே சிந்தித்தான் ரபீக். "நூர்ஜஹானும் இருக்கிறாளே, நாம் கேட்க வந்ததை எப்படிக் கேட்பது? கேட்கலாமா, அல்லது கேட்காமலேயே போய் விடலாமா?'

'யாரிருந்தால் என்ன. வந்தது வந்தே, கேட்டு விட்டே போய் விடு" அவன் மூட மனம் கூறிற்று.

இன்னொரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு ரபீக் பேசினன், "உமா! என்னைப் பற்றி அனுவசியமான வார்த்தைகளெல்லாம் சொல்லி அனுப்பி இருக்கிறாயே, படித்த பெண்களின் போக்கே இப்படித்தானே?"

"நான் உங்களை மணந்து கொள்ள மறுப்பதற்குக் காரணம் கேட்டனுப்பினீர். பதில் சொல்லி அனுப்பினேன். அதில் தவறொன்றும் இல்லையே! உள்ளதைத்தானே எடுத்துச் சொன்னேன்" உம்மஹறானி பதில் கூறினாள்.

"உமா! போகட்டும், கடைசி முறையாகக் கேட்கிறேன். நன்றாகச் சிந்தித்து முடிவாகப் பதில் சொல்லு. என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறாயா? இல்லையா?"

ரபீக் கேட்ட கேள்வியை செவியுற்று உம்மஹறானியும், நூர்ஜஹானும், அவனுடைய முட்டாள் தனத்தைப் பாராட்டி உள்ளுக்குள்ளேயே நகைத்துக் கொண்டனர். சிரிப்பை அடக்கிக் கொண்டு

நூர்ஜஹான் கூறினள், "அவளைத் தான் எதிர் வீட்டு ஸலீம் அண்ணாவுக்குக் கொடுக்க நிச்சயித்து விட்டார்களே!"

"உண்மையாகவா!" ரபீக் வியப்புடன் கேட்டான்.

"உண்மையாகத் தான்!"

"சரி. இப்பவும் என்ன கெட்டு விட்டது. உம்மஹானியை ஒரு வார்த்தை சொல்லச் சொல்லு, போதும். அந்தக் கல்யாணத்தை நிறுத்தி விடுகிறேன்!"

"என்னடி சொல்றே?" நூர்ஜஹான், உம்மஹானியைக் கேட்டாள்.

"அவரை மணந்து கொள்ள எனக்கு இஷ்டமில்லை!" உம்மஹானி கூறினள் ரபீக் காதில் விழும்படி

அதைக் கேட்ட ரபீக், "அது தான் உன் கடைசி முடிவா?" என்று ஆத்திரத்துடன் கேட்டான்.

"ஆமாம்!" தயக்கமில்லாமல் சாந்தமாகப் பதிலளித்தாள் உம்மஹானி.

அவளுடைய ஆணித்தரமான பதிலைக் கேட்ட ரபீகின் கண்கள் கோபத்தால் சிவந்தன. கையிலிருந்த துண்டு சிகரெட்டை வீசி எறிந்து விட்டு வீட்டை விட்டு வெளியேறினன். அவன் முகத்தில் ஆத்திரமும், அவமானமும், ஏமாற்றமும் நடனமாடின.

* * * *

உம்மஹானி, வீட்டிலுள்ள வேலைகளைச் செய்து விட்டு மிச்ச நேரத்தில் ஸலீமை எதிர்பார்த்து ஜன்னலருகே காத்துக் கொண்டிருப்பாள். ஸலீமும், வீட்டினுள்ளிருந்து வரும்போதும், உள்ளே போகும்போதும் ஒருமுறை அந்த ஜன்னலைப் பார்த்து விட்டுதான் செல்வான். அவன் பார்க்கும்போது அங்கே அவள் நின்று கொண்டிருந்தால் மேலே செல்லாமல் அங்கேயே அப்படியே நின்று அவளைப் பார்ப்பான். அப்போது அவள் தன் முகத்தை ஜன்னல் திரைக்குள் மறைத்துக் கொள்வாள்; பிறகு மெள்ள மெள்ள எட்டிப் பார்ப்பாள்; கடைசியாக தன் முழு முகத்தையும் அவனுக்குக் காண்பித்துவிட்டு மின்னலைப் போல் மறைந்து விடுவாள்.

ஒரு நாள்:

கடைத் தெருவிலிருந்து வீடு திரும்பிய ஸலீம், வழக்கம்போல் அந்த ஜன்னலைப் பார்த்தான். உம்மஹானி அங்கே நின்று கொண்டிருந்தாள். ஆனல், அன்று அவள் செய்கையிலே ஒரு மாறுதல். அவன் தன்னைக் கவனிப்பதை அறிந்தும் அவள் மறையாமல் அப்படியே நின்று கொண்டிருந்தாள்; ஒருமுறை அவனைப் பார்த்து விட்டு தன் பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள்; பிறகு சிறிது

670058.

சிறிதாகத் தன் பார்வையை உயர்த்தி கடைக்கண்ணால் அவனைப் பார்த்தாள்; அவன் அன்பும், ஆசையும் கலந்த கண்களால் தன்னை நோக்குவதைக் கண்டு மீண்டும் பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள். நாணத்தால் அவள் முகம் சிவந்தது. இரண்டு நிமிடங்கள் வரை அப்படியே நின்று கொண்டிருந்தாள். வழக்கம்போல் கடைசி முறையாக அவனைப் பார்த்துவிட்டு மறைந்து விட்டாள்.

'அவள் மீண்டும் பிரசன்னமாகுவாள்' என்ற நம்பிக்கையுடன் ஸலீம் ஜன்னலை முறைத்துக் கொண்டிருந்தான். "பார்த்தது போதும், உள்ளே வா அண்ணா!" என்று உள்ளிருந்து குரல் கொடுத்தாள் பாத்திமுன்னிஸா.

ஸலீம் உள்ளே வந்து பாத்திமுன்னிஸாவைப் பார்த்து "நான் எதைப் பார்த்துக் கொண்டிருந்தேன்?" என்று ஒன்றும் அறியாதவனைப்போல் கேட்டான்;

"என் அண்ணா பொய்ச் சொல்றீங்க. நீங்க கேத்து சொன்னீங்களே, 'பெண்ணை ஒருமுறை நன்றாகப் பார்க்க வேண்டும்' என்று, இன்று உங்க கண்களின் தாகம் அடங்கும்வரை பார்த்து விட்டீரா. அல்லது இன்னும் பார்க்க வேண்டும் போலிருக்கிறதா?" பாத்திமுன்னிஸா சிரித்துக் கொண்டே கேட்டாள்.

"இதெல்லாம் உன் ஏற்பாடுதானா?"

"பின்னே? ராத்திரி போய் அவளிடம் உன் விருப்பத்தை தெரிவித்தேன். அதனால் இன்று உங்களுக்கு ரெண்டொரு நிமிஷங்கள் தரிசனம் தந்தாள்"

"இந்த, அதற்குப் பரிசு" என்று கூறி தன் கையிலிருந்த பொட்டலத்தை அவளிடம் தந்தான் ஸலீம். பாத்திமுன்னிஸா அதை ஆவலுடன் பிரித்து பார்த்தாள். 'ஜார்ஜெட்' சாடி ஒன்று காட்சி அளித்தது.

* * * *

ரபீக் கோபத்தால் கொதித்துக் கொண்டிருந்தான். அவனெதிரே உட்கார்ந்திருந்த கரீம் மௌன விரதம் அனுஷ்டித்துக் கொண்டிருந்தான்.

"நான் அப்பவே சொன்னேன், அவ படித்த பெண்ணுப்பா, துடுக்காகப் பேசுவாள் என்று. நீ போ போ என்று சொன்னே. உன் பேச்சைக் கேட்டுக்கிட்டு போய் அவமானமடைந்து திரும்ப வேண்டி நேர்ந்தது" ரபீக் கூறினான்.

"நானென்ன செய்வேன் ரபீக்? நீ போனால் உன் நடை, உடைகளைக் கண்டாகிலும் உன்னை மணக்க இசைவாள் என்று நினைத்தேன்......சரி இப்ப என்ன செய்ய உத்தேசித்திருக்கிறாய்?"

"அவளை அந்தப் பஞ்சப்பயல் ஸலீமுக்குக் கொடுக்க நிச்சயித்து விட்டார்களாம். இப்ப நாம் செய்ய வேண்டியது என்ன வென்றால் அந்தக் கல்யாணம் நடைபெருமல் தடைபட்டுவிடச் செய்ய வேண்டும்"

"எப்படி?"

"அதை நீதான் யோசித்து சொல்ல வேண்டும். இந்தா சிகரெட்டைப் பிடித்துக் கொண்டே யோசனை பண்ணு" என்று கூறி ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்து அவன் பக்கம் நீட்டினன் ரபீக். அதை வாங்கி வாயில் வைத்து ஒரு 'தம்' இழுத்தான் கரீம். புகையை ஊதி விட்டு கண்ணை மூடிக் கொண்டு யோசிக்கலானன்.

சில நிமிடங்கள் அங்கே மௌனம் நிலவியது.

"ஆ! சரியான யோசனை!" துள்ளி குதித்தான் கரீம்.

"என்னப்பா?" ரபீக் கேட்டான்.

"சிகரெட் பிடிப்பதால் நல்ல நல்ல 'ஐடியா'க் களெல்லாம் உருவாகின்றன என்பது எத்தனை உண்மை!"

"என்ன 'ஐடியா' அப்பா உருவாச்சு?"

"இப்போ உருவாகி இருக்கிற 'ஐடியா' இருக்கிறதே, ரொம்ப அருமையான 'ஐடியா!' இந்த மாதிரி 'ஐடியா'க் களெல்லாம் என் போன்றவர்களின் மூளையில்தான் உதயமாகும்!"

"அவ்வளவு நல்ல ஐடியாவா?"

"ஆமாம். இந்த ஐடியா, அந்தக் கல்யாணம் தானகவே தடைபட்டு விடும்படி செய்வதோடு நில்லாமல், வேறு இடத்திலும் அந்தக் கல்யாணம் கூடாமல் செய்துவிடும்! நான் இப்ப கூறும் 'ஐடியா' வைக் கையாண்டால் அவளை—அதுதான் அந்த உம்மஹானியை—யாருமே கல்யாணம் செய்து கொள்ள விரும்ப மாட்டார்கள். இன்னும்......

"போதுமப்பா உன் ஐடியாவின் வர்ணனை. முதலில் அந்த ஐடியா என்ன அதைச் சொல்லு"

"சொல்லுகிறேன் கேள். உம்மஹானியைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகும் ஸலீமுக்கு ஒரு கடிதம் எழுத வேண்டும். அதாவது: நீ கல்யாணம் செய்து கொள்ளப் போகும் பெண் கன்னியல்ல, கற்பிழந்தவள். அவளுடைய காதலன் ஒருவன் இருக்கிருன்; அவன் அடிக்கடி அவள் வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருக்கிருன். இது ஊரறிந்த ரகசியம். மேலும்......"

"கரீம்! புரிந்து கொண்டேன் உன் ஐடியாவை! உம்மஹானியின் நடத்தை சரியில்லை என்று அவள் மீது அவதூருக மொட்டை கடிதம் எழுதச் சொல்ற?" ஸலீமுக்கு

(தொடரும்)

மஜ்மூஉஸ் ஸலவாத்து

இப்புத்தகம் அல்லாஹு தஆலாவின் அஸ்மாவுல் ஹுஸ்னாவைப் பொதிந்த துஆ கன்ஜுல் அர்ஷும் இன்னும் நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் பேரில் எப்போதும் கேமமாய் ஓதி வருகிற ஸலவாத்துகளில் மிகவும் புகழானதும் மற்றும் ஸலவாத்துக் கெல்லாம் தாயானதுமான **உம்மு ஸலவாத்தும்**, இன்னும் அல்குத்புர் றப்பானீ வல்கௌதுஸ் ஸமதானீ முஹ்யித்தீன் அப்துல் காதிரி ஜைலானி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேரில் ஓதப்படும் **கவ்திய்யா ஸலவாத்தும்**, இன்னும் ஸெய்யிதினா குத்புல் அக்தாபு வ கௌதுல் அஃபாபு ஜிந்தா ஷாஹ் மதார் பதீவுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேரில் ஓதப்படும் **மதாரிய்யா ஸலவாத்தும்** இன்னும் அநேக சில்லரை ஸலவாத்துகளும், துஆக்களும் ஒருங்கே சேர்ந்த அருமையான கிதாபு. சுத்தத் தமிழில் சிறியதாய் பாக்கெட் புத்தகம் போல் கிளேஸ் காகிதத்தில் அழகாய் அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. விலை அணா. 15

ஷை அறபுத் தமிழ் விலை அணா. 15

மிஃருஜுல் ஆரிபீன் பீ தர்ஜுமத்தி மின்ஹாஜில் ஆபிதீன்.

(புதிய பதிப்பு)

“மிஃருஜுல் ஆரிபீன்” என்பது பதினான்கு இல்முகளுக்கும் ஓர் அலைகடலாகிய நாயகம் இமாம் கஸ்ஸாலி றஹிமத்துல்லாஹி அலைஹி அவர்கள் இயற்றியுள்ள ஞானநீதக் களஞ்சியமான ‘மின்ஹாஜில் ஆபிதீன்’ என்னும் கிரந்தத்திலிருந்து வெகு நுட்பா நுட்பமாக மொழி பெயர்த்ததோர் அரிய சாதனமாகும்; அறிவுக்கு ஆகாரமாம். இதில் அடங்கி யிருக்கும் ‘மஃரிபா’ என்னும் தீட்சை ஞானத்தின் பாகுபாடுகளையும், நேர்வழிக்குரிய சாதனத் தெளிவுகளையும், யோகாப்பியாச முறைகளையும் பற்றி விவரித் தெழுத வேண்டுமானால் எவ்வளவு நீடித் தெழுதினாலும் முடியாது. நோட்டமிட்ட நன்பர்களுக்கே இதன் அருமை விளங்கும்.

சுத்தத் தமிழ் கலிகோ பைண்டு ரூ. 4

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ், 5.

சிறைப் பறவை சிப்கத்துல்லா

அல்லது

துப்பு துலக்கிய தூயவர்.

அத்தியாயம் 3. (தொடர்ச்சி)

"அதனை நான் ஒப்புக்கொள்கிறேன்"

குட்டை மனிதனின் கைகள் நடுங்கியன. உதடு துடித்தது. அவன் வினவினான்:

"நண்பனை கட்டாற்றில் விட்டுவிட்டு நீ மட்டும் தப்பித்துக் கொள்வதா? ஒவ்வொருவனும் சுயநலமிதானா? அது இயற்கையின் நியதிபோலும். அவன் காட்டிக் கொடுத்து விடுவானென்ற சந்தேகம் எழுந்தவுடன் புலன் விசாரணையில் ஈடுபட்டிருக்கும் போலீஸாருக்குத் தகவல் அறிவித்து அவர்களுக்கு நூறு அல்லது இருநூறு இலஞ்சம் கொடுத்து உன்னை நீ காப்பாற்றிக் கொள்வதா?"

கரீமுல்லாகான் தோள் அசைத்து, அசிரத்தையாகச் சொன்னார்:

"எனக்குத் தெரியாது; படித்துப் பயன் பெறுத அளவுக்கு நான் முதுமை அடைந்து விடவில்லை."

"ஆனால் நீ காரியமாற்றும் முறை இதுதானே? மாமியார் வீட்டுக்கு விருந்துண்ணச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ள நீ கையாளும் உபாயம் இதுதானே?"

கடுமையான வார்த்தைகளைக் கொண்டு, காரசாரமாகப் பேசித் தொல்லையளிக்கும் கரீம் ஷரீபை நோக்கினார் கரீமுல்லா. வெளியரங்கமாக, அதிர்ச்சியோ அல்லது கவலையோ அடைந்தவராகத் தோன்றாவிடினும் உண்மையில் அவர் அவனது வம்புப்பேச்சைக் கேட்டு மனம் வேதனைப்பட்டார்.

"உன்னுடன் நான் வாதம் செய்ய மாட்டேன். அதற்குரிய வன்மையும் எனக்கில்லை."

"உன்னால் முடியாது. தர்க்கரீதியாகத்தான் நான் பேசுகிறேன். இந்த வீட்டுக்கு நிறைய பணம் செலவாகி யிருக்கும். இரண்டு லட்சத்தில் பாதி என்ன? கணக்கில் நான் 'புலி' அல்ல."

கரீமுல்லா வாளாவிருந்ததைக்கண்டு அவன் மேலும் வினவினான்: ஒரு லட்சம் அல்லவா? எனக்கு அறுபதினாயிரம் கிடைத்தது. இன்னும் எனக்கு நீ நாற்பதாயிரம் செலுத்தவேண்டி யிருக்கிறது.

“நீ பேசுவது கப்பல் கொள்ளை சம்பவம் சம்பந்தப்பட்டதாக விருந்தால், மொத்தம் கிடைத்தது ஒரு லட்சத்து இருபதினுயிரத்துக் கும் குறைவான தொகைதான். உனக்கு அறுபதினுயிரம் அளித் தேன். அது உனது பங்கைவிட சற்று அதிகமானதாகும். நீ சிறை சென்ற அன்றே உனது பாங்கியில் அந்தப் பணத்தைச் செலுத்தி விட்டேன்”

“பத்து லட்சம் ரூபாய் என பத்திரிகைகளில் தகவல் வெளியாகி யிருந்ததே”

“பத்திரிகைகளில் படிப்பதை நம்புவதில்லை, நம்புகிறுயா? கரீம்! சிறுபிள்ளைத் தனமாகப் பிதற்றிக்கொண்டிருக்கிறுய். என்மீது பழி சுமத்துவதற்கு நீ முயற்சிக்கிறுயா?”

“பழிசுமத்துதலா?” கரீம் அதிர்ச்சியுற்றுன். “நிச்சயமாக, நண்பர் களிடையே கண்ணியம், நம்பிக்கை நிலவுகிறது. நியாயமாக, நேர்மை யாக எனது பங்கைத்தான் நான் கோருகிறேன்”

கரீமுல்லா மெல்லச் சிரித்தார்.

“நகைச்சுவையாக இருக்கிறதா? பதினைந்து வருடங்களாக ‘சுறுசுறுப்பு’ இன்றிச் சும்மா இருந்த பழைய நண்பனெருவனைப் பார்த்து ஏளனம் செய்கிறுயா?”

“ஐம்பதாண்டுகள் நீ நரகில் இருந்து இப்போது திரும்பி வந்தி ருந்தாலும் நான் நகைபுரியத்தான் செய்வேன்.”

தனக்காக கரீம் ஷரீப் வருத்தப்பட்டான். அவனது பலவீனம் அதுதான். அவன் கேட்டான்:

“உனக்கு மகள் ஒருத்தி இல்லையா? இளமையுள்ள இனிய நங்கை! இன்று மணமாயிற்று. இல்லையா?

“ ஆம் ”

“பணத்தை மணந்து கொண்டாள் அல்லவா?”

“ஆம், நல்ல மனித னெருவனை மணந்து கொண்டிருக் கிறுள்”

“உனது இறந்தகால இழிவை, அவன் அறிந்திருக்க மாட் டான்”

“இல்லை. நீ சொல்வதென்ன? இம்மாதிரி பேசுவதால் நாற்பதா யிரம் பெற்றுக்கொள்ளலாமென எண்ணுகிறுயா?

“எனக்கு ஒரு மகன் உண்டு. ‘குழந்தைகள் மூலம் குடும்பத்தை சிநேகம் பிடிக்கலாம்’ என்பது முதியோர்வாக்கு. எனவே, அந்த வழியில் என் வலையில் உன்னைச் சிக்கவைப்பதற்கு நான் விரும்பு கிறேன்.”

ஒரு வினடியில் அவன் மீது பாய்ந்து, ஒரே குத்தில் அவனை வீழ்த்தி கரீமுல்லா சொன்னர்:

"நீ வயோதிகன், மரணத்தைக்கண்டு அஞ்சி ஓடுகிருய். உனது பார்வையிலிருந்து உனது நிலையை என்னல் புரிந்து கொள்ள முடிகிறது. எதற்கும் நான் அஞ்சவில்லை. நான் உன்னைக் கொலை புரிந்து விடுவேன்"

கரீமுல்லாவின் முரட்டுப்பிடி, மூர்க்கப் பேச்சு முன்பு, கரீம் ஷரீப் திக்குமுக்காடினன். மூச்சுத் திணற அவன் சொன்னன்: கொலை பற்றிய பேச்செல்லாம் எதற்கு? நியாயமானதையே நான் கேட்கிறேன். மகள்மீது மட்டற்ற பாசம் கொண்டிருக்கிருயா? அவளிடம் அளவிலா அன்பும் அருளும் கொண்டிருக்கிருய் என்பதை நான் நன்குணர்வேன். அவளது நலன், நல்வாழ்வு பொறுத்தவரை நீ பித்துக் கொண்டிருக்கிருய் என்று சொல்கிருர்கள். அவள் அழகியா? உன்னிடம் அவள் நிகரற்ற அன்பு கொண்டிருக்கிருள் என்று நான் நினைக்கவில்லை. சிறைப்பறவை சிப்கத்துல்லா அக்காரிகையிடம் காதல் கொண்டிருந்தான். அவள் மூலமாக உன்னை நான் வசப்படுத்தப் போகிறேன்"

இம்மாதிரி அவன் பேசிக்கொண்டிருந்தபோது அவனது கழுத்தை இரும்பு போன்ற கரம் பற்றி, அவனை 'கரகர' வென இழுத்துச் சென்றது. அவனது பாரத்தையும் அல்லது எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் கரீமுல்லாகான் வெகு சுலபமாக அவனை குறுகிய பாதைவழியே இழுத்துச் சென்று, பூந்தோட்டத்தைக் கடந்து வாயிலுக்கு வெளியே தூக்கி எறிந்தார். அவர் கை உதறியதும் கரீம் ஷரீப் தூசி படிந்த ரஸ்தாவில் 'பொத்'தென விழுந்தான்.

"கரீம், திரும்பவும் உள்ளே வராதே" என்ற வார்த்தையுடன் கரீமுல்லா வெளியே சென்று விட்டார், அவனது பதிலுக்காகவும் காத்திருக்கவில்லை.

கரீம் ஷரீப் வந்த காரியத்தை அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வமோ அல்லது சிறை நண்பனெருவனைக் கண்டு க்ஷேமம் விசாரிக்க வேண்டுமென்ற எண்ணமோ இன்றி சிப்கத்துல்லா அந்த இருவரின் பார்வையை விட்டும் அப்பால் சென்று விட்டார்.

மலர் மணம் கமழும் பூந்தோட்டத்தில் உலவினர். சிறு நீரோடையைக் கண்டு களித்தார். கரீமுல்லா விவேகத்துடன் வீடு வாங்கி யிருக்கிருர் என்ற எண்ணம் எழுந்தது. சலவைக்கல் ஆசனத்தில் அமர்ந்து, தனிமையின் தனிச்சிறப்பை அனுபவித்தார்.

மரியமுக்கு மணமாகி விட்டது. அவரைப் பொறுத்தவரை அதுதான் அவரது வாழ்வின் ஆதியும் அந்தமும் ஆகும். மரியம் மகிழ்ச்சியோடு இருக்கிருள் என்பது அவருக்கு ஆத்ம திருப்தி

அளிப்பதாக விருந்தது. தனது காதல் கனவு கானல் நீராகி விட்டது உள்ளத்தை உறுத்தியது. அவரை யன்றி வேறு எவனுடனும் அவள் ஆனந்தத்தோடு இருப்பாளா என்ற சம்சயமும் ஏற்பட்டது.

அவளிடம் அவர் கொண்டிருந்த பாசம் எத்துணை ஆழமானது! திடீரென ஒரு குரல் கேட்டது. அருவருக்கத்தக்க, கிறிச்சென்ற அக்குரல் கரீம் ஷரீபினுடையது. மரியமை மனம்போன போக்கில் வைது கொண்டிருந்தான் அவன்; சிப்கத்துல்லா சினம் கொண்டார். கரீமுல்லாகானின் கவசத்தில் பலவீன பாகம் இதுதான்; இந்த இடைவெளிமூலமாக அவரைப் புண்படுத்த முடியும்.

துள்ளி யெழுந்து பூந்தோட்டத்தை நோக்கி விரைந்தார். தோட்டத்தில் பஷீர் மேஜை யொன்று போட்டுக் கொண்டிருந்தான். அங்கு வேறு எவரும் கிடையாது. கரீமுல்லாவும் கரீமும் மறைந்து விட்டிருந்தனர். நடைபாதையைக் கடந்து சென்றபோது ஓர் அறையில் அழகிய ஒன்றைக் கண்டான். மணக் கோலத்துடனிருந்த மங்கை யொருத்தியின் கரம் அவருக்கு நேராக நீட்டப்பட்டிருந்தது. அவளது வனப்பையும் வசீகரத்தையும் கண்டு அடையாளம் கண்டு கொள்ள முடியாமல் தயங்கினர் அவர்.

அவளுக்கு அருகில் ராணுவ உடைதரித்த மனிதனொருவன் நின்றிருந்தான். அவளுக்குப் பக்கத்தில் கரீமுல்லா நின்றுகொண்டிருந்தார். அவள் மரியம் என்பது தெரிந்ததும் அவளை உற்றுப் பார்த்தார் அவர்-

பூங்கொடியாளின் புன்னகை தவழ் வதனத்தைக் கண்டு, அதே சமயத்தில் அவளது கணவனையும் நோக்கினர். ஒருகண நேரம் இருவருடைய கண்களும் சந்தித்துக் கொண்டன. கண் இமை அசைவு மூலம் கூட தன்னைக் காட்டிக் கொள்ள அவர் விரும்பவில்லை.

சிப்கத்துல்லா சதியை உணர்ந்து கொண்டார். கள்ள நோட்டு அச்சடிப்பவனும் துரோகியுமான காதர்கான்தான் காப்டன் காதிரி. தந்தையும் தனயனும் சேர்ந்து கரீமுல்லாகானைக் கவிழ்ப்பதற்குச் செய்துள்ள சூழ்ச்சி இம்மண எற்பாடு என்பதை எளிதில் உணர்ந்து கொண்டார். (தொடரும்)

18058

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

அரை விலை! அரை விலை!!

மனாயிஹுல் அன்வார் பீ மதாயிஹுர் ரஸூல் வல் அப்ரார்.

இந்த கிதாபில், நமது நாட்டில் வழமையாய் ஓதி வருகிற ஸுபுஹான மௌலிது, பர்ஸஞ்சி மௌலிது, ஹஸன் (ரலி) ஹுஸைன் (ரலி) மௌலிது, முஹியித்தீன் (ரலி) மௌலிது, ஷாஹுல் ஹமீது (ரலி) மௌலிது ஆக ஐந்து மௌலிதுகளும், யாஸையிதி, யாகுத்பா, யாஸைய்யிதி ஷைகி, ஷபீஹுக பைத்து, கலாஸீ பைத்து, மழை பைத்து, பீஹுப்பி (ஸலவாத்து) பைத்து, கஸீதத்து ஹுஸைனிய்யா, அயாரப்பி பைத்து, ஜுத்பிலுத்பிக முனாஜாத்து, ஜித்தா ஷாஹ் நாரிய்யா பைத்து, அபுல் ஹஸனிஷ் ஷாதிலீ (றஹ்) குத்பிய்யா, காஜா முயீனுத்தீன் (ரலி) பர்திய்யா, யாமன் யரா பைத்து, கல்வத்து நாயகம் பேரில் கஸீதா முதலியவையும் அடங்கி யுள்ளன. இது பெரிய எழுத்தில்எழுதி, போட்டோ பிளாக் செய்து, கிளேஸ் காகிதத்தில் சுத்தமாய் அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டது.

விலை ரூ. 6—0—0

ஷை கிதாபு ஒரே நேரத்தில் 6 வாங்கினால் அரை விலையாக கொடுக்கப்படும். அதாவது ரூபா. 18–0–0க்கு 6 கிதாபுகள் கொடுக்கப்படும். இந்த சலுகை சொர்ப்ப காலத்திற்கே இருக்கும். இந்த சலுகை எவ்வித முன் அறிவிப்பும் இல்லாமல் நிறுத்தப்படக்கூடும்.

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

இனாம்! இனாம்!!

ஹமீதிய்யா முஸ்லிம் காலண்டர் 1957.

இங்கிலீஷ், தமிழ், அரபு, ஆக மூன்று தேதிகளும் 3 கலர்களில் அச்சிடப்பட்டு, ஒரு மாதத்திற்கு ஒரு ஷீட்டாக 12 ஷீட்டுகள் அடங்கியுள்ளது. ஒவ்வொரு ஷீட்டிலும் தொழுகைகளின் நேரங்களாகிய அவ்காத்துஸ் ஸலாத்தும் சேர்க்கப்பட்டுள்ளது.

எங்களிடமிருந்து ஒரே நேரத்தில் எங்களது சொந்த பிரசுரங்களுள் ரூபாய் 10க்கு குறைவில்லாமல் சொந்த உபயோகத்திற்கு கிதாபு, புஸ்தகம் தருவிப்பவர்களுக்கு ஷ காலண்டர் ஒன்று (எங்களிடம் காலண்டர் ஸ்டாக் யிருக்கும் வரை) இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும்.

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.